DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளக்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative — kailain.thillai@gmail.com
Ragu Thillainathan, Sales Representative — homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam, Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977
என்னை அழையுங்கள்

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran, Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneservices.ca

IMMIGRATION MATTERS?
OUR SERVICE ARE:
Immigration and Refugee
Landlord and Tenants
Small Claims Matters
Provincial Offences
416-334-9464

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam, Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

27ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எதிக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1489
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday October 18, 2024

# தென்னிலங்கையில் கண் அறுவைச் சிகிச்சைக்காக காத்திருந்த சிங்களப் பெண்மணிக்கு உடனடி சிகிச்சை செய்த யாழ் போதனா வைத்தியசாலை கண் வைத்தியர்

தென்னிலங்கையைச் சேர்ந்த சிங்கள பெண்மணி ஒருவர் தனது கண்பார்வையை இழந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட கண்புரை அறுவைச் சிகிச்சை மூலம் தனது பார்வையை மீளவும் பெற்றுள்ளார். இதனால் அவர் யாழ்ப்பாண வைத்தியசாலை நிர்வாகத்திற்கும் தனது கண் சத்திரசிகிச்சை செய்த தமிழ் பேசும் வைத்தியருக்கும் தனது நன்றியைத் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே ஒரு கண்ணில் இவருக்கு பார்வை பறிபோய் இரண்டு வருடமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், இரண்டாவது கண்ணில் கண்புரை அறுவை சிகிச்சை யாழ். போதனை வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டு அவர் தனது பார்வையை பெற்றுள்ளார். தனக்கு பார்வை கிடைத்ததை இட்டு குறித்த பெண் பெரும் மகிழ்ச்சியடைந்துள்ளார்.

இதேவேளை, வவுனியா வைத்தியசாலையில் பதிவு செய்யப்பட்ட 2000 நோயாளிகளில் இவரும் ஒருவர் என்பதும் அவர் தொடர்ச்சியாக யாழ்பபாண வைத்தியசாலையோடு தொடர்பில் இருந்த காரணத்தால் அவருக்கு இந்த சந்தர்ப்பம் வழங்கப்பெற்றது குறிப்பிடத்தக்கது.

# கனடாவில் நான்கு நூல்கள் ஒரு பாடல் இசைத்தட்டு ஆகியவற்றை ஒரே மேடையில் வெளியிட்டு வைத்த எழுத்தாளர் அகணி சுரேஸ்

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் முன்னாள் தலைவரும் எழுத்தாளரும் கவிஞரும் விமர்சகருமான அகணி சுரேஸ் அவர்கள் தனது நான்கு நூல்களான இன்பமுற வாழ்வதற்கு இலக்கியப் புதையல்கள். பனிதரும் அழகு. **'Forever With Her'** என்னும் ஆங்கில சிறுகதைத் தொகுதி மற்றும் நளனோடு தமயந்தி ஆகிய நான்கு நூல்கள் மற்றும் ஒரு பாடல் இசைத்தட்டு ஆகியவற்றை ஒரே மேடையில் வெளியிட்டு வைத்து கவிஞர்கள் எழுத்தாளர்கள், பேராசிரியர்கள் வாசகர் என அனைத்து தரப்பினரும் கூடியிருந்த மண்டபத்தில் அனைவரதும் பாராட்டுக்களைப் பெற்றார்.

எழுத்தாளர் அகணி சுரேஸ் அவர்கள் அகணி சுரேஸ் அவர் தொழில்ரீதியாக ஒரு குடிசார் பொறியியலாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 1210-2-24 அன்று சனிக்கிழமையன்று பிற்பகல் 1.30 தொடக்கம் ஸ்காபுறோ நகரசபை மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்ற இந்த நூல்களின் வெளியீட்டு விழாவை கனடாக் கவிஞர் கழகத்தின் தலைவர் குமரகுரு கணபதிப்பிள்ளை அவர்கள் தொகுத்து வழங்கினார்.



தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
*கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
*நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் மிசிசாகாவிலும் பிறாம்ரனிலும் அமைந்துள்ள எமது அடைவு மாளிகையை நாடுங்கள்.
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7 — 905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 — 905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
PRIME LEGAL SERVICES
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
905-334-6851

கனடாவிலிருந்து கியூபா சுற்றுலா!
இலங்கையை ஒத்த கால நிலையுள்ள கியுபா தேசத்திற்கு சென்று எமது தாயகச் சூழலை அனுபவியுங்கள். டிசம்பர் மாதம் முதல்வாரத்தில் இங்கிருந்து பயணம். ஒரு வாரம் அல்லது இரண்டு வாரங்கள் தங்கலாம்.
எம்மால் வழங்கப்படும் உணவோடு உடன் ஊராடு மற்றும் உடன் மீன் மற்றும் மரக்கறி வகைகள் பழங்கள் என அனைத்தையும் சுவையாகவும் சுத்தமாகவும் உண்டு மகிழலாம்.
தொடர்புகளுக்கு: Thava - 647-469-9839
என்னும் இலக்கத்தை அழைக்கவும்


கலாபூஷணம் சோக்கல்லோ
சண்முகம்அரங்கு
கலைவேந்தன்
கணபதி ரவீந்திரன்
yugam radio
yugam TV
CANADIAN TAMIL ARTISTS' ASSOCIATION
நவரசத்தாரகை
ரூபி யோகதாசன்
கனடிய தமிழ் கலைஞர்கள் சங்கம்
யுகம் வானொலி, யுகம் தொலைக்காட்சி இணைந்து
பெருமையுடன் வழங்கும்
20வது ஆண்டு
நாடகப் பெருவிழா
2024
சிரிக்க ! சிந்திக்க!! சிந்தனைக்கு விருந்தளிக்க!!!
ஒரே மேடையில் ஐந்து நாடகங்கள்.
நிகழ்ச்சி தொகுப்பாளர்
ஸ்ரீ ரஞ்சித் ஸ்ரீனிவாசகம்
SATURDAY
OCT
19
@4:30PM
Toronto Pavilion
190 Railside Rd,
North York, ON M3A 1A3
TICKETS: $20
Ravi 416-898 7284 / Ruby 416-670-6522
நாடக அனுசரணை வழங்குவோர்கள்
முற்பகல் செய்யில்
தவிப்பு
சகுனியின் சபதம்
தில்லாலங்கடி
சிதம்பர சக்கரம்
K T GROUP
CORNWALL SHIVAN TEMPLE - CANADA
1730 VINCENT MASSEY DRIVE, CORNWALL, ON K6H 5R6
Web : www.cornwallshivan.ca
Vijaya Jewellery
JEYA JEYAKANTHAN
TRUST. INTEGRITY. EXPERIENCE.
100 பவுண் நகை பரிசு
647-702-2159
LISTO
Aravinth Ratnasingam
CanMore
647 613 2900
647-996-5922
35 Karachi Dr
NEW PREMIUM STONE LTD
416.858.1290
416.261.1544
Vettyvel
Shan Thayaparan
416-587-7675
TOP PRODUCER
Abi
Amal
416.732.1810
416.829.9993
Royal Fashions
Tel : 416.519.1119
Sri
கனகாம்பிகை
416-269-7198
RAGI KUMAR
EAST WEST
289-660-7500
WAF HELPING HANDS OUTLET
WORLD ACTION FOUNDATION
Chapel Ridge
Christeen Seevaratnam
416-258-6759
Finch Warden Medical Clinic
THAMIZHA
(416) 878-5454
2900 Markham Rd Unit - D2, Scarborough
தமிழரின் நிர்வாகத்தில்
Royal King
416.706.0004
LOTUS
416-834 5753
Patricia Peter
LAND KING
Specialized in Development Land Sales
JEGAN
416 666 9777
R.R.Rajkumar
647-289-6164
ALOE FRESH
BEAUTY SPA
100 % Natural
Mrs. Vasanthi Ramasamy
647-787-1398
www.vashasproduct.ca
OPTIMART
FINANCIAL SOLUTIONS
AUTO - HOME - LIFE
DEVADAS LAW
Vina Devadas
416.266.1234
1415 Kennedy Road, Unit 3, Toronto, Ontario, M1P 2L6
Mohan Ramesar
416.528.0372
RUBY AND RUBY
INCOME TAX SERVICE
Thusam Kanagaratnam
Stork Traders
WWW.STORKTRADERS.COM

We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign)
JOURNALISTS: Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# யானையை விரட்டியடிக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கு நாள் குறித்தாகிவிட்டது!

"யானையை விரட்டியடிக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கு நாள் குறித்தாகிவிட்டது" என்ற தலைப்பில் எமது ஆசிரிய பீடத்தால் ஆகஸ்ட் மாதம் எழுதப்பெற்ற அவ்வாரத்திற்குரிய "கதிரோட்டத்தை" நாம் இந்த வாரமும் மீள் பிரசுரம் செய்கின்றோம். அதற்கு நாம் எழுதக் கூடிய காரணங்கள் ஒன்றுக்கு மேற்பட்டவை உண்டு. அன்று நாம் எமது கதிரோட்டத்தில் குறிப்பிட்டவாறு "யானையும்" அதன் பாகன் ரணிலும் தாற்கடிக்கப்பட்டவர்களாக கூட்டில் அடைபட்டுப் போனார்கள். ஆனாலும் எம் தமிழ் அரசியல்வாதிகள் சிலரும் அவர்களுக்கு பின்னாள் எவ்விதமான அரசியல் பார்வையும் இல்லாதவர்களாக திரியும் "தொண்டர்களும்" ரணிலோ அன்றி மகிந்தாவோ மீண்டும் வரவேண்டும் என்ற ஆதங்கத்தோடு சமூக ஊடகங்களில் பதிவுகளை இடும் பாதகமான வேலைகளை தொடர்ந்து செய்து வருகின்றார்கள். அதன் காரணமாகவே அன்று நாம் எழுதிய தலையங்கத்தை நாம் மறு பிரசுரம் செய்கின்றோம்.
இதோ வருகிறது! அதோ வருகிறது என்று கூக்குரல்கள் கேட்ட வண்ணம் இருந்த அந்த செய்தி இன்று வந்துள்ளது. தமிழ். சிங்கள இஸ்லாமிய அரசியல்வாதிகளினதும் அவர்களின் குடும்பத்தினரும் உல்லாசபுரியாகவும் பொழுது போக்கும் இடமாகவும் விளங்கும் பாராளுமன்றத்தையும் அரசாங்கத்தையும் தலைமை தாங்கியும் தனது கட்டுப்பாட்டுக்குள்ள வைத்தும் "அநியாயங்களை" அரங்கேற்றி வரும் தற்போதைய ஜனாதிபதி ரணிலின் கனவாக விளங்கிவந்த அந்த தேர்தலுக்கு நாள் குறித்தாகி விட்டது.

ரணில் விக்கிரமசிங்கா தனது "மாயை"த் தோற்றத்தைக் காட்டிய வண்ணம் மீண்டும் பதவியில் அமர்வதற்காக பேச வேண்டியதைப் பேசி, செய்ய வேண்டியதைச் செய்து, "கொடுக்க வேண்டியதைக் கொடுத்து தயாராகி வரும் அந்த தேர்தல் செப்டம்பர் மாதம் 21ம் திகதி நடத்தப்படவுள்ள தாக இலங்கை அரசின் வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியுள்ளது.
நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஒரு கனதியான பொது வேட்பாளரை தமிழ் மக்கள் சார்பில் நிறுத்தி எமது தனித்துவத்தையும் ஒற்றுமையையும் காட்ட வேண்டும் என்று தாயகத்திலும் புலம் பெயர்ந்த நாடுகள் பலவற்றிலும் வாழும் தமிழ் மக்களும் முன்வரிசையில் பணியாற்றும் ஆர்வலர்களும் இரவு பகலாக இயங்கிக்கொண்டிக்கையில் ஒரு சில தமிழ் பேசும் அரசியல்வாதிகளோ இந்த தேர்தல் தமிழர்களுக்காக அல்ல பெரும்பான்மை இனத்தவர்களுக்கே என்ற எண்ணத்தோடு ரணில் விக்கிரமசிங்கவையே மீண்டும் பதவியில் அமர்த்த வேண்டும் என்று கங்கணம் கட்டியும் "கையூட்டு" பெற்றுக்கொண்டு அதற்காக கடுமையாக "பேசி" வருவதையும் நாம் நேரடியாகவே பார்த்து வருகின்றோம்.
எனினும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தான் வெற்றி பெற வேண்டும் என்ற நம்பிக்கையுடன் செயற்பாடுகளில் இறங்கியுள்ள ஜேவிபி வேட்பாளர் அநுர குமாரவிற்கும் உலகெங்கும் வாழும் பெரும்பான்மை மக்கள் தங்கள் ஆதரவை வழங்குவதற்கு தயாராகியுள்ளனர்.

ஆனால் அரசியல்வாதிகளாக இருந்து சுகபோக வாழ்க்கையை தொடர்ச்சியாக அனுபவித்து வரும் "அந்த" குழுவினர் வெவ்வேறு கட்சிகளில் இருந்தாலும் திரை மறைவில் ஒன்றாக சந்தித்து உரையாடி நாட்டுக்கு நன்மையைக் கொண்டு வரக் கூடிய நோக்கமும் போக்கும் அற்ற ஒருவரை தேர்ந்தெடுக்க கடுமையாக கபடத்தனங்களை அரங்கேற்றி வருகின்றார்கள்.
இந்த தேர்தல் தொடர்பாக இவ்வாரம் எமது உட்பக்கத்தில் தான் எழுதியுள்ள கட்டுரையில் யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பி வைக்கும் நிலாந்தன் அவர்கள் தனது கருத்துக்களாக பின்வரும் விடயங்களைக் குறிப்பிடுகின்றார். அதற்கு மேலாக பொதுத் தமிழ் வேட்பாளர் என்ற முனைப்புடன் செயற்பட்டு வரும் தமிழ் மக்கள் பொதுச் சபை என்னும் அமைப்பு இதய சுத்தியுடன் இயங்கிவருகின்றது. அதில் பல கட்சிகள் இணைந்துள்ளன. என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
அவர் மேலும் எழுதுகையில் "வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் அரசியல்வாதிகளில் ஒரு பகுதியினர் அதைக் கடுமையாக எதிர்க்கிறார்கள். வடக்கில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, சுமந்திரன், டக்ளஸ் தேவானந்தா போன்றவர்கள் எதிர்க்கிறார்கள். கிழக்கில் பிள்ளையான் மற்றும் முஸ்லிம் கட்சிகள் எதிர்க்கின்றன.

சுமந்திரன் அதனை ஒரு கோமாளிக் கூத்து என்று சொன்னார். அதற்கு எதிராக ஒரு கூட்டத்தைக் கூட்டி மிகவும் உணர்ச்சி பொங்க உரை நிகழ்த்தினார். அதன் பின் அமெரிக்கத் தூதரகம் ஒழுங்குபடுத்திய ஒரு நிகழ்வில், தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கும் கட்சித் தலைவர்களையும் விமர்சகர்களையும் ஏள்ளிநகையாடியிருக்கிறார்."
இவற்றையெல்லாம் கவனித்துப் பார்த்தால் வடக்கிலும கிழக்கிலும் தங்கள் பாராளுமன்ற பதவிகளுக்கான தளத்தை வைத்துக்கொண்டு கொழும்புத் தலைமைகளுக்காகவும் ஆளும் பெரும்பான்மை இன அரசியல்வாதிகளுக்காகவும் தொடர்ச்சியாக "வேலை" செய்து வரும் சுமந்திரன் போன்றவர்களை எவ்வாறு அவர்களின் "இருப்புக்களிலிருந்து" அகற்றலாம் என்பதை தமிழ் மக்கள் பொதுச் சபையே முடிவெடுக்க வேண்டும் என்று நாம் கருதுகின்றோம்!.

**DZ Driver Wanted**
GTA and surrounding area
Call Nathan: 416-520-1324
or Email
Sentax72@gmail.com

**Kitchen Jobs in Markham**
Looking for part-time kitchen helper, Dishwasher and delivery.
Also needed, South Indian cook and continental breakfast
Line Cook Part Time.
**2800/14th avenue and woodbine Markham**
**Call AMAR: (416) 988-9518**

**வீடு விற்பனைக்கு**
சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் கொழும்புத்துறை வீதி-பாண்டியன்தாழ்வில். 2 பரப்புக் காணயில் கடையுடன் சேர்த்து கட்டப்பெற்ற 3 அறைகள் கொண்ட அழகிய வீடு உடனடியாக விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: **437 441 5699**
அல்லது மின்னஞ்சல் saitheva09@gmail.com



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கையின் 150வதுஅஞ்சல் தினத்தை முன்னிட்டு காங்கேசன்துறை தபாலகத்தினால் ஏற்பாடு செய்யப்பெற்ற மாபெரும் இரத்ததான முகாம்




150வது அஞ்சல் தினத்தை முன்னிட்டு காங்கேசன்துறை தபாலகத்தினால் மாபெரும் இரத்ததான முகாம் ஒன்று 14-10-2024 அன்னறையதினம் நடாத்தப்பட்டது.

காங்கேசன்துறை தபாலக அஞ்சல் அதிபர் திருமதி சுதாகரன் சசிகாலாவின் தலைமையில் இடம்பெற்றது.



தபால் ஊழியர்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் குருதிக்கொடையாளர்கள் என பலர் இந்த உயிர் காக்கும் உன்னத பணியில் ஈடுபட்டனர்.

# ஐக்கிய நாடுகள் சபையின் (UNDP) உதவிச் செயலாளருக்கும் இலங்கை ஜனாதிபதிக்கும் இடையில் சந்திப்பு



## அரச நிர்வாகம் மற்றும் பொருளாதார மறுசீரமைப்புகளுக்கு ஒத்துழைப்பு வழங்க உறுதி!

ஐக்கிய நாடுகள் சபையின் உதவிச் செயலாளர் நாயகம் கன்னி விக்னராஜா 14-10-2024 அன்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்தார்.

"ஆட்சி நிர்வாகம், அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் மற்றும் தேர்தல் முறைமை என்பன தொடர்பில் இதன் போது முக்கியமாக கவனம் செலுத்தப்பட்டது. "பல் பரிமாண அபாய சூழ்நிலைகளைப் புரிந்துகொள்வது மற்றும் இலங்கை மக்கள் மீதான அவற்றின் தாக்கம்" என்ற தலைப்பில் தயாரிக்கப்பட்ட அறிக்கையும் ஐ.நா சபை பிரதிநிதியினால் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு கையளிக்கப்பட்டது.

இந்த அறிக்கையின் அடிப்படையில் இலங்கையின் அபிவிருத்தி முயற்சிகளுக்கு ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டம் பூரண ஆதரவை வழங்கும் எனவும் பிரதிநிதி உறுதியளித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்பு குறைவாக இருப்பது குறித்தும் இந்த சந்திப்பில் விசேடமாக கவனம் செலுத்தப்பட்டது. பொருளாதார நடவடிக்கைகளில் கிராமப்புற பெண்களின் பங்களிப்பை மட்டுப்படுத்தியிருப்பது நிதித் துறையில் குறிப்பிடத்தக்க சவால்களுக்கு வழிவகுத்துள்ளது என்று ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டம் சுட்டிக்காட்டியது. மேலும், தேசியப் பொருளாதாரத்தில் விவசாயத் துறை குறைந்த பிரதிநிதித்துவத்தைக் காட்டுவதும் இதற்கு காரணமாகிறது.

ஆசிய வலயத்தில் உள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையில் விவசாய உற்பத்தித் திறன் மோசமான நிலையில் காணப்படுவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது. விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் பெரும்பாலான விவசாயிகள் சிறிய அளவிலான நிலப்பரப்பைக் கொண்டுள்ளதாகவும் பெரும்பாலான விவசாயிகள் விவசாயத்தை தமது பிரதான வருமான வழியாக கருதவில்லை எனவும் ஜனாதிபதி எடுத்துக்காட்டினார். இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, பேரம் பேசும் சக்தி மற்றும் விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்த உதவியாக உள்ள விவசாய சங்கங்களை வலுப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் டிஜிட்டல் மயமாக்கல் வேலைத்திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்கு ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் ஆதரவை வழங்க விருப்பம் தெரிவித்த உதவிச் செயலாளர் நாயகம், ஊழலைக் குறைப்பதில் முக்கிய கருவியாக டிஜிட்டல் மயமாக்கலைப் பயன்படுத்த முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

தேர்தல் முறைமை சீர்திருத்தங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டதுடன், அனைத்து இன மற்றும் மத சமூகங்களையும் உள்ளடக்கிய பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் இவ்வாறான சீர்திருத்தங்கள் அமையும் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க குறிப்பிட்டார்.

நுண்கடன் துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டதுடன், அத்துறையின் வட்டி விகிதங்கள் நியாயமாக இல்லை எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். அதிக பெண்களை உள்வாங்குவதன் மூலம் நுண்நிதித் துறைக்கு ஆதரவளிக்கும் வகையில் புதிய அபிவிருத்தி வங்கியொன்றை ஸ்தாபிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும், மூலதனத்தைப் பாதுகாப்பதற்காக பெண் தொழில்முயற்சியாளர்கள் முன்வைக்கும் சிறந்த முன்மொழிவுகளுக்கு திறைசேரி உத்தரவாதங்களை வழங்குவதற்கும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

புதிய அரசாங்க சீர்திருத்தங்கள், ஊழலுக்கு எதிரான முயற்சிகள் மற்றும் பொருளாதாரம் மற்றும் பாராளுமன்றம் இரண்டிலும் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்கு ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் உறுதிப்பாடு இந்த சந்திப்பின் போது மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது.

இக்கலந்துரையாடலில் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி அசுசா குபோடா, மூலோபாய ஈடுபாடு, டிஜிட்டல் மற்றும் புத்தாக்கக் குழுவின் தலைவர் பாதில் பாக்கீர் மாக்கார் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# யாழ்ப்பாணத்தில் மரண விசாரணை அதிகாரிகளின் ஊழல்கள் அம்பலமாகியுள்ள்ன!

பிரான்ஸுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து, பணமோசடியில் ஈடுபட்ட மரண விசாரணை அதிகாரியொருவர் பருத்தித்துறையில் வைத்து அண்மையில் கைது செய்யப்பட்டார்.

15 இலட்சம் ரூபா மோசடி செய்தார் என்று அவருக்கு எதிராக யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி குணரோஜன் தலைமையிலான குழுவினரிடம் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் மேற்படி மரண விசாரணை அதிகாரியை கைது செய்தனர்.

அவர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். ஒரு தொகைப் பணத்தைத் திரும்ப வழங்கியதைத் தொடர்ந்து அவரைப் பிணையில் நீதிமன்றம் விடுவித்தது.

இது இவ்வாறு இருக்கையில் யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு சில பெண், ஆண் மரண விசாரணை அதிகாரிகள் மரணத்தில் இலஞ்சம் தேடும் சம்பவங்களும் இடம்பெறுகின்றன.

இறந்த உடலங்கள் மீது விரைவாக மரண விசாரணைகளையும், உடற்கூற்று பரிசோதனைகளையும் எதிர்பார்த்து மக்களும் இலஞ்சம் வழங்கவேண்டிய சூழ்நிலைக்குள் தள்ளப்படுகின்றனர்.

தற்கொலை செய்கின்றவர்களது மரணம விசாரணைகளை மேற்கொள்ளும்போது, அந்த மரணத்தில் சந்தேகம் இருப்பதாக குறித்த மரண விசாரணை அதிகாரிகள் தெரிவிக்கும்போது, மக்களும் வேறு வழியின்றி இலஞ்சம் கொடுக்கவேண்டிய சூழ்நிலைக்குள் தள்ளப்படுகின்றனர்.

அத்துடன் இறப்பு சான்றிதழ்களை பெற்றுக் கொள்வதிலும் அவர்கள் பாதிக்கப்படுகின்றனர். இவ்வாறான சம்பவம் ஒன்று அண்மையில் கூட யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றுள்ளதாகவும், மேலிடங்களுக்கு முறைப்பாடு வழங்கியும் எந்தவிதமான பிரயோசனமும் கிடைக்கவில்லை என அறியமுடிகிறது.

# இலங்கையின் தேசியமட்ட பெண்கள் உதைபந்தாட்டத்தில் தெல்லிப்பளை மகாஜனா 20 வயது, 17 வயது இரு அணிகளும் சாம்பியன்களாயின




இலங்கையின் தேசியமட்ட பாடசாலைகளுக்கிடையிலான பெண்கள் உதைபந்தாட்ட தொடரின் இறுதியாட்டத்தில் மகாஜனக் கல்லூரியின் 17, 20 வயது அணிகள் இரண்டும் சாம்பியன்களாகி கல்லூரிக்கு பெருமைசேர்த்துள்ளன.

செல்வி குயின்சி தலைமையிலான 20 வயது மகாஜனா பெண்கள் அணி இறுதியாட்டத்தில் பொலனறுவை பெண்டிவெல கல்லூரியை எதிர்கொண்டு 4:0 என்ற கோல்கள் கணக்கில் பெரு வெற்றிபெற்றது.



லயன்சிகா, குயின்சி தலா இரு கோல்களை பெற்றுக்கொடுக்க மகாஜனா 4:0 என சாம்பியனாகியது.

உமாசங்கவி தலைமையிலான 17 வயது மகாஜனா பெண்கள் அணி இறுதியாட்டத்தில் குருநாகல் மலியதேவ மகளிர் கல்லூரியை எதிர்கொண்டு 4:0 என்ற கோல்கள் கணக்கில் பெரு வெற்றிபெற்றது.

உமாசங்கவி (2 கோல்கள்) , கல்சிகா (1 கோல்) கியூஸ்ரிகா (1 கோல்) ஆகியோர் கோல்களை பெற்றுக்கொடுக்க மகாஜனா 4:0 என சாம்பியனாகியது.

17 வயதுப் பெண்கள் அணி தொடர்ச்சியாக 2022, 2023, 2024 என 3 வருடங்கள் சாம்பியனாகி வரலாற்றுப் பதிவை ஏற்படுத்தியுள்ளது. அத்தோடு 17 வயதுப் பெண்கள் அணிக்கு 2022 ஆம் ஆண்டுதான் போட்டி ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு தொடக்கம் வெற்றி வாகை சூடிவருவதும் இவ்வாறான வெற்றிகளுக்கான காரணகர்த்தாக்களாக கல்லூரி அதிபர் மற்றும் உதைப்பந்தாட்ட பயிற்சி ஆசிரியர் மற்றும் ஆசிரியைகள் ஆகியோரே என்று பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்

# தமிழரசுக் கட்சியில் உள்ளவர்கள் சிலரின் தன்னிச்சையான செயல்பாடுகளினால் கட்சி மீது மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்

## மன்னார் வேட்பாளர் சட்டத்தரணி எஸ்.டினேசன்





- எஸ்.ஆர்.லெம்பேட் (14-10-2024)

தமிழரசுக் கட்சியை மக்கள் வெறுக்கவில்லை. கட்சியில் உள்ளவர்கள் சிலரின் தன்னிச்சையான செயல்பாடுகளினால் கட்சி மீது மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர் என தமிழரசு கட்சி சார்பாக மன்னார் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் சட்டத்தரணி செல்வராஜ் டினேசன் தெரிவித்தார்.

தமிழரசு கட்சி சார்பாக மன்னார் மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் அறிமுக கூட்டம் 13-10-2024 தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை மன்னாரில் உள்ள இலங்கை தமிழரசுக்கட்சியின் கிளை அலுவலகத்தில் இடம்பெற்றது.

குறித்த கூட்டத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது, கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னாரில் இரண்டு வேட்பாளர்கள் தமிழரசு கட்சி சார்பாக போட்டியிடுகின்றனர். அவர்களை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்பது தனது குறிக்கோளாக உள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

அவரது கருத்து எமக்கு மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் ஏற்படுத்துகின்றது.

எங்களை வெற்றி பெற வைக்க தமது முயற்சிகளையும் மக்கள் மத்தியில் தெழிவூட்டளையும் முன்னெடுக்க உள்ளதாக அவர் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியை மக்கள் வெறுக்கவில்லை. கட்சியில் உள்ளவர்கள் சிலரின் தன்னிச்சையான செயல்பாடுகளையே மக்கள் வெறுத்து வருகின்றனர் என்பதை நான் வருகை தந்தவர்களிடம் தெரிவித்துள்ளேன்.

பல்வேறு கிராமங்களுக்குச் சென்று மக்களை சந்திக்கும் போது குறித்த குற்றச்சாட்டுக்களை மக்கள் என்னிடம் முன்வைத்துள்ளனர்.

எதிர் வரும் காலங்களில் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாத வகையில் நாங்கள் செயல்பட வேண்டும்.என அவர் மேலும் தெரிவித்தார்.

# மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் புதிய எலும்பியல் சத்திர சிகிச்சை விடுதிகள் திறந்து வைக்கப்பட்டது





- எஸ்.ஆர்.லெம்பேட் (13-10-2024)

தொடர்ந்து அதிகரித்து வரும் வீதி விபத்துக்கள் மற்றும் ஏனைய திடீர் விபத்துக்களால் பாதிக்கப்படும் நோயாளிகளுக்கு உயர் தரமானதும் பாதுகாப்பான சத்திர சிகிச்சை சேவைகளை வழங்கும் நோக்கில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் புதிய எலும்பியல் துறை சத்திர சிகிச்சை ஆண், பெண் விடுதிகள் 13-10-2024 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தின் மிக நீண்ட கால தேவையாகவிருந்த எலும்பு முறிவு மற்றும் சிகிச்சைக்கான விசேட விடுதிகளை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் அஸாத் ஹனிபா திறந்து வைத்தார்.




இந்நிகழ்வில் எலும்பியல் சத்திர சிகிச்சை விசேட நிபுணர்கள் டாக்டர் பி. திலீபன், டாக்டர் ஆர்.எம்.எம். தீபன், ஏனைய விசேட வைத்திய நிபுணர்கள் மற்றும் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.



Dr. புஷ்பா வன்னித்தம்பி
பல் வைத்தியர்

Dr. Pushpa.V & Associates
Dentist

New Patients Welcome
Open 7 Days a week
Sunday by Appointment only

சகல விதமான பல்வைத்திய சேவைகளுக்கும்

Scarborough
1200, Markham Road,
Suite # 119, Scarborough
ON M1H 3C3
(Markham / Ellesmere)
416-289-7187

Markham
7595, Markham Road,
Suite #4,
ON. L3S 0B6
(Markham / 14th, Opposite to Costco)
905-201-8900



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வடக்கு கிழக்கில் மதுபானசாலை அனுமதி பெற்றவர்களின் விபரங்களை தேர்தலுக்கு முதல் வெளிவிட வேண்டும்

பு. கஜிந்தன்



வடக்கு மற்றும் கிழக்கில் மதுபானசாலைக்கான அனுமதி பெற்றவர்கள் எவரும் எமது அணியில் இல்லை என தெரிவித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், மதுபானசாலை அனுமதி பெற்றவர்களின் விபரங்களை ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்க பாராளுமன்ற தேர்தலுக்கு முன்னர் வெளியிட வேண்டும் என்றார்.

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் சுயேட்சையாக போட்டியிடும் வேட்பாளர் ஈ.சரவணபவனின் ஊடக சந்திப்பு யாழ்ப்பாணத்தில் 14-10-2024 அன்று நடைபெற்றபோதே இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், மக்கள் பக்கம் இருப்பதாக கூறும் அனுர குமார திஸாநாயக்க இன்னமும் மதுபான சாலை அனுமதிப்பத்திரத்தை பெற்றவர்களின் விபரங்களை வெளியிடாமல் வைத்துள்ளார்.

தேர்தலுக்கு பின்னர் தான் பார் பெமிட் பட்டியல் வெளிவருமோ தெரியவில்லை.

மதுபான சாலை அனுமதிப்பத்திரங்கள் உண்டு என்பது புலனாகிறது. சிலரிடம் இருக்கிறது. சிலர் இல்லை என்று சொல்லிக்கொள்கின்றார்கள். சிலர் வேறு பெயர்களில் மாற்றி வைத்திருக்கின்றார்கள். எத்தனையோ விடயங்கள் நடந்தேறிவிட்டன. பணப்பரிமாற்றங்களும் நடந்து முடிந்துவிட்டது.

தேர்தலுக்கு பின்னர் அனுர குமார திஸாநாயக்க பெயர் விபரங்களை வெளியிடுவதால் எந்த பிரியோசனமும் இல்லை.

நீங்கள் தெற்கில் மட்டுமல்ல வடக்கு கிழக்கு என எங்கும் ஊழலற்ற ஆட்சியை நிறுவுவதாக இருந்தால் உண்மையை வெளியிடுங்கள் - என்றார்.

இது இவ்வாறிருக்க. இந்த அறிக்கையை வெளியிட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரவணபவன் அவர்கள் தான் மைத்திரிபால சிறிசேனா ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் மறைந்த இரா. சம்பந்தன் அவர்களின் மறுப்பையும் மீறி யாழ்ப்பாணத்தில் தனது இல்லத்தில் நடைபெற்ற தனது புதல்வியின் பிறந்த நாள் கொண்டாட்டத்திற்கு அந்த ஜனாதிபதியாக இருந்தவரை அழைத்து விருந்தளித்தவர் என்பதும் எத்தனையோ தமிழ் இளைஞர்கள் இன்று சிறையில் வாடிய வண்ணம் தமது இளைமைக் காலத்தின் சுகங்களை இழந்தவர்களாய். கல்விவாய்ப்புக்களை இழந்தவர்களாய் வாடி வதங்கி அடைபட்டு இருக்கையில் தனது இல்லத்திற்கு ஜனாதிபதியை அழைத்து கொண்டாடியவர். இந்த வாய்ப்பு இவருக்கு எவ்வாறு கிடைத்தது? மக்கள் அவருக்கு தமிழ்ப் பிரதிநிதி என்றவகையில் அளித்த வாக்குகள் மூலமாக பாராளுமன்ற உறுப்பினர் ஆகியமையால் தானே? என்று யாழ்ப்பாணத்தில் துண்டுப் பிரசுரம் ஒன்று வெளியாகி உள்ளதாகவும் செய்தியாளர்கள் அறிவித்துள்ளார்கள்.

# சந்தர்ப்பவாதிகளையும் மக்கள் சேவகர்களையும் இனங்கண்டு தமிழ் மக்கள் வாக்களிப்பர் என்கின்றார் ஈ.பி.டி.பியின் பேச்சாளர் சிறீ ரங்கேஸ்வரன்!




நாம் முன்னெடுத்துவரும் இணக்க அரசியல் பொறிமுறையூடாக தமிழ் மக்களின் நலன்சார்ந்து பலவற்றை சாதித்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் ஊடக பேச்சாளரும் கட்சியின் சார்பில் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளருமான ஐயாத்துரை சிறிரங்கேஸ்வரன் எமது தரப்பின் முயற்சியின் காரணமாகவே 13 ஆவது திருத்தச் சட்டமும் இன்றுவரை பாதுகாக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் 14ம் திகதி திங்கட்கிழமை அன்றையதினம் மேற்கொண்டு ஊடக சந்திப்பின்போது இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

கிடைத்திருக்கும் உரிமைகளையும் இல்லாமல் செய்யும் போக்கிலேயே சக தமிழ் கட்சிகளின் செயற்பாடுகள் அமைந்து வருகின்றன எம்மை பொறுத்தளவில் மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற நிலைப்பாட்டுக்கமையவே எமது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம்.

இதேநேரம் இம்முதுறை ஈ.பி.டி.பி 7 தேர்தல் மாவட்டங்களை உள்ளடக்கிய 10 மாவட்டங்களில் போட்டியிடுகின்றது. அத்துடன் நடைபெறவுள்ள தேர்தல் என்பது தமிழ் மக்களுக்கு மிக முக்கியமானது.

ஏனெனில் எவர் சந்தர்ப்பவாத அரசியலை முன்னெடுக்கின்றார்கள், எவர் மக்களது சேவகர்களாக இருந்து செயற்படுகின்றார்கள், எவர் சுயநலன்களுக்காக செயற்படுகின்றார்கள் என்பதை மக்கள் நிர்ணயிக்கின்ற தேர்தலாக இது இருக்கின்றது. ஏனெனில் மக்கள் தற்போது உண்மையை கண்டுகொண்டுவிட்டனர்.

எமது அரசியல் செயற்பாடுகளையும் நாம் முன்னெடுக்கும் பொறிமுறைகளையும் நாம் வெளிப்படையாகவே கூறுகின்றோம். இதை மக்கள் ஏற்று அணிதிரண்டு எமது சின்னமான வீணைக்கு வாக்களித்து எம்மை அரசியல் பலம் மிக்கவர்களாக்குவாரகள் என நம்புகின்றோம்.

இதனிடையே கடந்த நாடாளுமன்ற தேர்தலில் இரண்டு ஆசனங்களை பெற்றிருந்த ஈ.பிடி.பி இம்முறை எத்தனை ஆசனங்களை பெற்றுக்கொள்ளும் என எதிர்பார்ப்பதாக ஊடகவியலாளர்கள் கேட்டதற்கு அவர் பதிலளிக்கையில் - பல சந்தர்ப்பங்களில் ஒரு ஆசனத்தை தான் மக்கள் எமக்கு தந்திருந்தார்கள். ஆனாலும் கடந்த தேர்தலில் வன்னியிலும் ஓர் ஆசனம் கிடைத்தது இது எமது சேவைக்கும் கொள்கைக்கும் மக்கள் வழங்கிய அங்கிகாரம்.

நாம் சொல்வதை செய்பவர்கள், செய்வதையே சொல்பவர்கள். அதனால் மக்கள் எம்மை உன்னிப்பாக அவதானிக்க தொடங்கியுள்ளார்கள். இதனடிப்படையில் இம்முறை நடைபெறவுள்ள தேர்தலில் மக்கள் எமக்கு 7 ஆசனங்களை பெறுவதற்கான ஆணையை தருவார்கள் என நம்புகின்றோம். மக்களது ஆணையே எமது நிலைப்பாடாகவும் உள்ளது.

இதேநேரம் பல்வகை மதம் இனம் சார்ந்தவர்கள் இருக்கும் நாட்டில் அவரவர் தத்தமது சார் நிலைப்பாட்டை முன்வைத்தே செயற்படுவார்கள்.

எம்மிடம் சுயநலமற்ற தடம் மறாதா கொள்கை இருக்கின்றது. அதனை முன்னெடுத்துச் செல்லும் ஆற்றலும் சிறந்த தலைமைத்துவ வழிகாட்டலும் இருக்கின்றது இதை கடந்தகால வரலாறுகளே சாட்சி சொல்லும்.

அந்தவகையில் மத்தியில் ஏற்பட்டதைப் போன்று தமிழ் அரசியல் பரப்பிலும் மாற்றத்தை கொண்டுவர தமிழ் மக்கள் தற்போது முயற்சிக்கின்றனர்.

அந்த மாற்றம் எம்மை நோக்கியதாக இருக்கின்றது என்றும் தெரிவித்த அவர் கார்த்திகை 14 ஆம் திகதியன்று தமிழ் மக்கள் அணி திரண்டு வீணைச் சின்னத்திற்கு வாக்களித்து எம்மை அரசியல் ரீதியில் பலம் மிக்கவர்களாக்குவார்கள் என்று நம்புகின்றோம்.

குறிப்பாக சந்தர்ப்பவாதிகளையும் மக்கள் சேவகர்களையும் மக்கள் இனங்காணும் நேரம் இது என சுட்டிக்காட்டியுள்ள அவர் தமிழ் மக்கள் சிந்தித்து வாக்களிப்பார்கள் என்றும் அந்த மாற்றம் எமக்கு கிடைக்கும் பட்சத்தில் தமிழ் மக்களது தீர் துயரங்களுக்கும் தீர்வு கிட்டும் என்றும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# போலிக் கையொப்பம் வைத்து யாழ்ப்பாணத்தில் பெறுமதிமிக்க காணி மோசடி! புகழ்பெற்ற சட்டத்தரணிகளும் மோசடிக்கு உடந்தை

ஜேர்மனியில் உள்ள ஒருவரின் போலிக் கையொப்பத்தை வைத்து யாழ்ப்பாணம் நகர்ப்பகுதியில் உள்ள காணி யொன்று மோசடி செய்யப்பட்டுள்ளது. இதற்கு யாழ்ப்பாணத்தில் உள்ள அரசியலில் ஈடுபாடு கொண்ட இளம் சட்டத்தரணிகள் இருவர் உடந்தையாக இருந்துள்ளார்கள் என்றும் அறியப்பட்டுள்ளது.

ஜேர்மனியில் உள்ளவர் நாட்டுக்கு வராத காலப்பகுதியைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தியே இந்தக் காணி மோசடி இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனியில் வசிப்பவர், யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி குணரோஜன் தலைமையிலான குழுவினரிடம் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகநபர்களான இருவரைக் கைதுசெய்துள்ளனர். அவர்களில் ஒருவர் பல்கலைக்கழக மொன்றின் கல்விசாரா ஊழியராவார்.

இந்த இருவரும் காணி மீதான தமது பொறுப்புகளைத் துறந்துள்ளனர். அவர்களுக்கு நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் ஏற்கனவே மேலும் இருவர் சந்தேகநபர்களாக கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் வர்த்தகப் பிரிவில் பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களுக்கு கௌரவிப்பு!





யாழ்ப்பாணத்தில் வர்த்தக பிரிவில் 2023ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தோற்றி பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகிய மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வானது 17-10-2024 அன்றையதினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.



சமூகநலன் சார்ந்து செயல்படும் அமைப்பான விடியல் அமைப்பினால் இந்த கௌரவிப்பு நிகழ்வானது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் க.பொ.த உயர்தர பரீட்சை எழுதவுள்ள ஏனைய மாணவர்களுக்கும் உற்சாகமூட்டும் வகையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

தேவாரத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. இதன்போது பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகிய மாணவர்களுக்கு பதக்கங்கள் அணிவித்து வெற்றி கிண்ணங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

பிரதம அதிதியாக யாழ். பல்கலைக்கழக மனிதவள முகாமைத்துவ பிரிவுக்கு பொறுப்பான பேராசிரியர் திரு. ரொபின்ஸன் கலந்துகொண்டதுடன், ஆசிரியர்களான எஸ்.பிரதீபன், ஆர்.தர்சன், திரு. திருக்குமாரன் ஆகியோரும், வழக்கறிஞர்களான செல்வி. சுரேக்கா, செல்வி. உஷாந்தினி ஆகியோரும், விடியல் அமைப்பினரும் மாணவர்களும் கலந்துகொண்டனர்.



இலங்கை செய்திகள் Sri Lanka News

# மக்கள் நலன்களுக்காக அன்றி தத்தமது சுயநலன்களை ஈடு செய்வதற்காகவே சங்கு ஊதுகின்றனர்

## முன்னாள் அமைச்சர் டக்ளஸ் சுட்டிக்காட்டு!

ஈபிடிபி கட்சிக்கு ஒரு கொள்கை உள்ளது. அதனை வெற்றி கொள்வதற்கான நேர்த்தியான வேலைத்திட்டங்களை நெறிப்படுத்தியே உரிய பொறிமுறையுடன் தனது பயணத்தை தொடர்கின்றது என சுட்டிக்காட்டிய செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா ஒற்றுமை ஐக்கியம் என பேசிக்கொண்டுருப்பவர்கள் இன்று தமிழரசு கட்சியில் இருந்து பிரிந்து தமது சுயநலன்களுக்காக சங்கை ஊதிக்கொண்டு திரிகிறார்கள் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமையன்று (14.10.2024) கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் வேட்பாளர்கள் உள்ளிட்ட கட்சியின் உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் பொது மக்கள் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது. அக் கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், தமிழர்களின் பிரதிநிதிகள் தாம் தான் என மார்தட்டிய கூட்டத்தினர் இன்று தமிழரசு கட்சி, ஜனநாயக தமிழரசு கட்சி, சுயேட்சை என திசைக்கொன்றாக பிரிந்து தமது சுயநலன்களை ஈடுசெய்வதற்காக தேர்தலில் போட்டிபோடுகின்றார்கள்.

இதேநேரம் தமிழரசு கட்சி என கூறிக்கொண்டு இருப்பவர்களும் இரண்டு அணியாக பிரிந்து செயல்படுகின்றார்கள்.

ஜனநாயகத்தில் கருத்து சுதந்திரம் இருக்க வேண்டும். அதுதான் அடிப்படை ஆனால் இங்கு நல்ல நோக்கத்திற்காக அந்த சுதந்திரத்தினை பயன்படுத்தாமல் அவர்கள் தத்தமது சுயலாபத்திற்காக பயன்படுத்துகின்றார்கள்.

அதனைவிட தமிழரசு கட்சியில் இருந்து பிரிந்தவர்கள் இன்று சங்கை ஊதிக்கொண்டு வந்திருக்கிறார்கள்.

இன்னொருபுறம் 13.10.2024) அன்று நடைபெற்ற தமிழரசு கட்சியின் கலந்துரையாடலில் சங்கு சின்னத்தை கொண்டுவாறவர்கள் கொலை, கொள்ளை, வன்முறைகளில் ஈடுபட்டவர்கள் எனவும் அதனாலே நாம் அவர்களை வெளியில் துரத்தி விட்டுள்ளோம் எனவும் கூறியுள்ளார்கள். ஆனால் அது உண்மை அல்ல. மாறாக சுயலாபத்திற்காகவே இவ்வாறு கூறியுள்ளார்கள்.

ஏனெனில் இவ்வாறு இன்று குற்றம் சுமத்தப்படும் அவர்களின் உண்மை நிலையை அன்று இவர்கள் தெரிந்திருக்கவில்லையா?

ஆனால் ஈபிடிபி அவ்வாறு அல்ல. ஈபிடிபி அதில் இருந்து மாறுபட்டது.

ஈபிடிபி யதார்த்தமான கொள்கையை முன்வைத்து அதனை அடைவதற்கான வேலைத்திட்டங்களை நீண்டகாலமாக முன்னெடுத்து வருகின்றது. இன்றும் அதை நோக்கியே செயற்பட்டு வருகின்றது.

இதேநேரம் ஈபிடிபிக்கு பேரம்பேசும் சக்தியாக போதிய ஆசனங்களை மக்கள் வழங்கியிருக்கவில்லை. போதிய ஆசனங்கள் இருக்குமாக இருந்தால் மக்களுடைய அபிவிருத்திக்கான, அரசியல் உரிமைக்கான தீர்வு என மூன்று வகையான பிரச்சினைகளையும் எம்மால் தீர்க்க முடியும்.

இதேநேரம் இம்முறை எமக்கு 5 ஆசனங்கள் கிடைக்க வேண்டும் என நான் எதிர்பார்கின்றேன். அவ்வாறு கிடைத்தால் இரண்டு வருடத்திற்குள் பிரச்சினைகளை எம்மால் தீர்க்கமுடியும்.

எமது கொள்கையை எற்றும் நாம் முன்னெடுக்கும் வழிமுறையை ஏற்றும் மக்கள் அணிதிரண்டு எம்முடன் பயணிக்கவேண்டும் என்றே அழைப்பு விடுக்கின்றெனே தவிர வாக்குகளை அபகரிக்க நான் இவற்றை முன்வைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழரசு கட்சிக்கு எதிராக யாழ். நீதிமன்றில் வழக்கு - முடக்கப்படுமா தமிழ் அரசுக் கட்சி?





இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நிர்வாகச் சீர்கேட்டை மையப்படுத்திய புதிய வழக்கொன்றை யாழ்ப்பாண நீதிமன்றில் தமிழ் அரசுக் கட்சியின் ஆயுட்கால உறுப்பினரான மார்க்கண்டு நடராசா அவர்கள் சமர்ப்பித்ததாக தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளது.

அதாவது தற்போது பதவியில் உள்ள கட்சியின் செயலாளர் பொதுச் சபையின் மூலம் தெரிவு செய்யப்படாத, சட்டரீதியற்ற செயலாளர் என்பதால் அவர் செயலாளர் பதவியில் தொடர்வதற்கு இடைக்கால தடை உத்தரவு விதிக்க வேண்டும் என்றும், கட்சியின் யாப்பின் அடிப்படையில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவை பொதுச்சபை கூட்டப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், கடந்த நான்கு ஆண்டுகளாக பொதுச்சபை கூட்டப்படவில்லை எனவும் தெரிவித்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

தமிழரசு கட்சியில் சிலரின் எதேச்சதிகாரம் மிக்க செயற்பாடுகள் தலைவிரித்தாடி வருகின்ற நிலையில் பலர் அந்த கட்சியை விட்டு வெளியேறியும், பதவிகளை துறந்த வண்ணமும் உள்ளனர்.

இவ்வாறான சூழ்நிலையில் அக் உறுப்பினரால் இந்த வழக்கு இன்றையதினம் யாழ்ப்பாண நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அதில் மாவை சேனாதிராஜா, ப.சத்தியலிங்கம், சேவியர் குலநாயகம் ஆகியோர் எதிராளிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடுகின்ற தமிழ் அரசுக் கட்சியை இந்த வழக்குகள் பாதிப்படையச் செய்யும் என கருதப்படுகிறது.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# Canadian High Commissioner for Sri Lanka meets Representatives of Fishing Communities of Islands in Northern Sri Lanka

## இலங்கைக்கான கனடிய தூதுவர் வடபகுதி தீவக மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்தார்



இலங்கையின் வட பகுதியில் உள்ள சப்த தீவுகளில் சுமார் 1,500 மீனவர்கள் உள்ளனர் ஆனால் அவர்களுக்காக ஒரு எரிபொருள் நிலையம்கூட இல்லாதமை மீனவர்களின் பெரும் பிரச்சனையாக காணப்படுவதாக இலங்கைக்கான கனேடியத் தூதுவரிடம் சுட்டிக் காட்டப்பட்டது.

இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வால்ஷ் (Eric Walsh) அவர்கள் கடந்த 14-10-2024 அன்று யாழ்ப்பாணம் தீவகப் பகுதி கடற்றொழில் அமைப்புக்கள் மற்றும் தீவக பெண்கள் வலையமைபின் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடினார்.



யாழ். புங்குடுதீவு புனித பிரான்சிஸ் சவேரியார் சனசமுக நிலைய மண்டபத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இதன்போதே மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகளால் மேற்படி விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்போது கடல் கடந்த தீவுகளான நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு போன்றவற்றின் முக்கியமான வாழ்வாதாரமாக கடற்றொழிலே காணப் படுகின்றது. இங்கே சுமார் 1,500 மீனவர்கள் கடல் தொழிலை நம்பியுள்ளபோதும் ஒரு எரிபொருள் நிலையம் கூட இல்லாதமை மீனவர்களின் பெரும் பிரச்சணையாக காணப்படுவதோடு தீவை அண்மித்த கரையிலும் எரிபொருள் நிலையம் இல்லை.

இதேநேரம் அதிக மழை, புயல் போன்ற இயற்கைச் சீற்றம் ஏற்பட்டால் படகுகளை நங்கூரம் பாச்சி பாதுகாக்கவும் ஒரு துறைமுக வசதிகிடையாது, இதேநேரம் தீவுகளில் நெடுந்தீவில் ஒரு நோயாளர் காவு படகுச் சேவையே காணப்படுகின்றது இது ஏனைய தீவுகளிற்கும் விரிவுபடுத்துவதே தீவக மக்களின் நிலையான வாழ்வியலிற்கு உறுதுணையாக அமையும் போன்ற விடயங்கள் சுட்டிக் காட்டப்பட்டது.

இச் சந்திப்பில் வட மாகாண கடற்தொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் அன்னலிங்கம் அன்னராசா, மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்ச்சன் பிகிராடொ, தீவக பெண்கள் வலையமைப்பினர், தீவக பகுதி கடற்றொழில் அப்புக்களில் நெடுந்தீவு சமாசத் தலைவர்.

யூலியான் குரூஸ், நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு பிரதேச மீனவ பெண்கள் அமைப்பைச் சேர்ந்த மூவர் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

## போர்க்களமான வன்னியின் 2 மனித புதைகுழிகள்; நீதிமன்ற உத்தவுரடன் விசாரணைகள் அடுத்த கட்டத்திற்கு



இலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட பாரிய மனித புதைகுழி உள்ளிட்ட போரினால் பாதிக்கப்பட்ட வன்னி மண்ணில் கண்டெடுக்கப்பட்ட இரண்டு புதைகுழிகள் தொடர்பான அடுத்தகட்ட விசாரணைகளை முன்னெடுப்பதற்கு நீதிமன்ற அனுமதி கிடைத்துள்ளது.

11 வருடங்களுக்கு முன்னர் மன்னாரில் தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்ட திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழியின் மாதிரிகளை வெளிநாட்டு ஆய்வகத்திற்கு அனுப்புவதற்கும், சதொச மனித புதைகுழியில் ஆறு வருடங்களுக்கு முன்னர் அகழ்ந்து எடுக்கப்பட்ட எலும்புகளை தடயவியல் மானுடவியல் பரிசோதனைக்கு பொருத்தமான மற்றொரு இடத்தில் சேமித்து வைப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் நீதிமன்றம் நேற்று (ஒக்டோபர் 16) அனுமதி வழங்கியுள்ளது.

திருக்கேதீஸ்வரம் மற்றும் சதொச மனித புதைகுழிகள் குறித்த வழக்குகளிலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணி சாந்திப்பிரகாசம் நிரஞ்சன், வழக்கு விசாரணைகளின் பின்னர் ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தி இந்த தகவலை வெளியிட்டார்.

மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழியில் இருந்து 2013ஆம் ஆண்டு அகழ்ந்து எடுக்கப்பட்ட 82 சடலங்களின் கார்பன் ஆய்வுக்கு தேவையான மாதிரிகளை புளோரிடா, மியாமியில் அமைந்துள்ள பீட்டா அனலிட்டிக்ஸ் நிறுவனத்திற்கு (Beta Analytic Inc.) அனுப்புவதற்கான நடைமுறைகளை ஆரம்பிப்பதற்கு சட்ட வைத்திய அதிகாரி தனஞ்சய வைத்தியரத்ன நீதிமன்றத்திடம் அனுமதி பெற்றதாக சட்டத்தரணி குறிப்பிடுகின்றார்.

“ஏற்கனவே மனித எச்சங்களில் இருந்து பகுப்பாய்விற்காக பிரித்து எடுக்கப்பட்ட மாதிரிகள் நீதிமன்ற காவலில் இருக்கின்றது. அதனை சீ-14 பரிசோதனைக்காக புலோரிடா மானுடவியல் ஆய்வகத்திற்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் இன்று வைத்தியரினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ள நீதிமன்றத்தினால் கட்டளை ஒன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது.”

சட்ட வைத்திய அதிகாரி சுனில் ஹேவகே, திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழியில் இருந்து எடுக்கப்பட்ட மனித எச்சங்களின் மாதிரிகள் தொடர்பில் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்கவிருந்த போதிலும், அவர் நீதிமன்றில் முன்னிலையாகவில்லையென, சட்டத்தரணி நிரஞ்சன் தெரிவித்தார்.

“குறித்த அறிக்கையை எதிர்வரும் மாதம் 21 ஆம் திகதி தாக்கல் செய்வதாக தவணையிடப்பட்டுள்ளது. அன்றைய தினம் குறித்த அறிக்கை மன்றில் சமர்ப்பிக்கப்படும். அத்தோடு குறித்த மாதிரிகள் சீ-14 பரிசோதனைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் தொடர்பான விபரங்கள் குறித்தும் அன்றைய தினம் அறிவிக்கப்படும்.”

மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி 2013ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டது. இது தொடர்பில் மன்னார் நீதவான் நீதிமன்றில் டிசம்பர் மாதம் 20ஆம் திகதி மன்னார் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்து நீதிமன்ற உத்தரவுக்கமைய மேற்கொள்ளப்பட்ட அகழ்வில் 82 மனித உடல்களின் எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டன.

### சதொச புதைகுழி மீண்டும் அகழ்வு செய்யப்பட வேண்டுமா?

ஆறு வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட பாரிய மனித புதைகுழி அகழ்வு தொடர்பில் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ள விசாரணை அறிக்கையை தயாரிக்கும் ஆரம்பகட்ட பணிகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

மன்னார் சதொச மனித புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட மனித எச்சங்கள் மற்றும் பொருட்களை பிரித்தெடுக்கும் நடவடிக்கை கடந்த வாரம் ஐந்து நாட்களாக மன்னார் நீதவான் முன்னிலையில் இடம்பெற்றதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணி சாந்திப்பிரகாசம் நிரஞ்சன் தெரிவிக்கின்றார்.

களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த தொல்லியல் துறையின் முதுகலைப் பிரிவின் பேராசிரியர் ராஜ் சோமதேவ சதொச மனித புதைகுழியை சுற்றி மாதிரிகளைப் பெறுவதற்காக அகழ்வு செய்ததாக சட்டத்தரணி சாந்திப்பிரகாசம் நிரஞ்சன், குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் குறிப்பிட்டார்.

“ராஜ் சோமதேவ அவர்களினால் சதோச மனித புதை குழியை சுற்றி நான்கு இடங்களில் பரீட்சார்த்தமாக தோண்டிப் பார்த்து 110 சென்றிமீட்டர் மற்றும் 130 சென்றிமீட்டர் அளவில் கடந்த 8ஆம் திகதி ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தது.”

தடயவியல் மானுடவியல் பரிசோதனைக்கு உரிய மாதிரிகளை வைப்பதற்கு தற்போது உள்ள இடம் போதுமானதாக இல்லை என, சட்ட வைத்திய அதிகாரி சுனில் ஹெவகே சார்பில், சட்ட மா அதிபர் திணைக்களம் சார்பில் முன்னிலையான சடடத்தரணிகளால் நீதிமன்றில் அறிவிக்கப்பட்டது.

இந்த மாதிரிகளை வேறு பொருத்தமான இடத்தில் சேமித்து வைக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளதாக சட்டத்தரணி நிரஞ்சன் தெரிவிக்கின்றார்.

“வைத்தியர் ஹேவகேயினால் பகுப்பாய்வு செய்யப்பட இருக்கின்ற மனித எச்சங்கள், அதாவது இறப்புக்கான காரணம், ஆண், பெண், வயதெல்லை போன்ற விடயங்கள் சம்மந்தமான ஆய்வு செய்வதற்கு forensic anthropology (தடயவியல் மானுடவியல்) ஆய்வினை செய்வதற்கு இட வசதிகள் போதையால் நீதிமன்றத்தில் இருந்து ஒரு கட்டளை ஒன்றை பிறப்பிக்குமாறு கோரப்பட்டது. அதற்கான கட்டளை நீதி மன்றத்தினால் வழங்கப்பட்டுள்ளது.”

2018 ஆம் ஆண்டு நிர்மாணப் பணிகளின் போது அடையாளம் காணப்பட்ட மன்னார் சதொச மனிதப் புதைகுழியில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளின் போது 28 சிறுவர்கள் உட்பட 376 மனித உடல் உறுகண்டுபிடிக்கப்பட்டன.

குற்றம் இடம்பெற் இடமாக கருதப்பட்டு மன்னார் சதொச மனிதப் புதைகுழி தோண்டப்பட்டு வருவதாக சட்ட வைத்திய நிபுணர் சமிந்த ராஜபக்ச 190ஆவது நாள் அகழ்வு விசாரணையின்போது ஊடகவியலாளர்களிடம் தெரிவித்திருந்தார்.

மன்னார் சதொச புதைகுழியில் இருந்து தோண்டியெடுக்கப்பட்ட ஆறு எலும்புகளை ஆய்வு செய்த அமெரிக்காவின் மியாமியை தளமாகக் கொண்ட பீட்டா அனலிட்டிக்ஸ் நிறுவனம் (Beta Analytic Inc.) அவை கி.பி.1404 - 1635ற்கும் இடைப்பட்ட நூற்றாண்டுகளை சேர்ந்தது என தீர்மானித்தது.

ஜூலை 2019 இல், அந்த தீர்மானத்தை கடுமையாக நிராகரித்த களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த தொல்லியல் முதுகலைப் பிரிவின் பேராசிரியர் ராஜ் சோமதேவ, வெகுஜன புதைகுழியின் காலத்தைப் பற்றிய நம்பகமான தீர்மானத்திற்கு வரக்கூடிய வகையில், ஜூலை 2019 இல், மனித எலும்புகளுடன் தோண்டியெடுக்கப்பட்ட நூற்றுக்கணக்கான பொருட்களில் புதிய விசாரணைகளை ஆரம்பித்தார்.

அப்போது கண்டெடுக்கப்பட்ட எலும்புகளில் சிலவற்றில் ஆழமான வெட்டுக்காயங்கள் காணப்பட்டதுடன், ஒன்றாகக் கட்டப்பட்டதாக தெரிவிக்கப்படும் எலும்புத் துண்டுகளும் மனித புதைகுழியில் காணப்பட்டன.

சதொச மனித புதைகுழி மீண்டும் தோண்டப்பட வேண்டுமா? பாதுகாக்கப்பட வேண்டுமா? என்பது குறித்து அடுத்த வழக்கு விசாரணைக்கு முன்னதாக அறிக்கை அளிக்குமாறு பேராசிரியர் ராஜ் சோமதேவ மற்றும் சட்ட வைத்திய அதிகாரி ராஜபக்ச ஆகியோரிடம் நீதிமன்றம் கேட்டுள்ளதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணி சாந்திப்பிரகாசம் நிரஞ்சன் தெரிவிக்கின்றார்.

“அத்தோடு ராஜ் சோமதேவவிடமும் எடுக்கப்பட்ட பிற பொருட்களில் இருந்து அதற்கான காலப்பகுதி என்னவாக இருக்கும் என்ற அறிக்கையையும் சமர்ப்பிக்க கோரப்பட்டுள்ளது. அத்தோடு மேலதிகமாக சதொச மனித புதை குழியை மீண்டும் அகழ்வு செய்ய வேண்டுமா? அல்லது அதனை பாதுகாக்க வேண்டுமா? என்பது தொடர்பான அபிப்பிராயங்களை பேராசிரியர் ராஜ் சோமதேவ அவர்களாலும் சட்ட வைத்தியர் ராஜபக்ச அவர்களினாலும் அறிக்கை ஒன்றை எதிர்வரும் நவம்பர் மாதம் 21ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது. அத்தோடு,குறித்த பொருட்கள் உரிய திணைக்களங்களுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய தரப்பினருக்கு கட்டளை ஒன்றும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.”

இலங்கை செய்திகள் Sri Lanka News

# வடக்கிலிருந்து பெண் பிரதிநிதி பாராளுமன்றம் செல்ல வேண்டும்

## தமிழ் மக்கள் கூட்டணியின் பெண் வேட்பாளர் மிதிலைச்செல்வி வேண்டுகோள்!

வடமாகாணத்தில் இருந்து இம்முறை பாராளுமன்றம் பெண் பிரதிநிதி ஒருவர் செல்ல வேண்டியது காலத்தின் கட்டாயம் என தமிழ் மக்கள் கூட்டணியின் பெண் வேட்பாளர் திருமதி. மிதிலைச் செல்வி ஸ்ரீ பத்மநாதன் வேண்டுகோள் விடுத்தார்.

15-10-2024 அன்று செவ்வாய்க்கிழமை யாழ். பல்கலைக்கழக மாணவர்களை சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை பாராளுமன்றத்தில் பெண் பிறநித்துவம் குறைவடைந்து செல்கின்ற நிலையில் கடந்த தேர்தலில் வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சார்ந்து எந்த ஒரு பெண் வேட்பாளரும் பாராளுமன்றம் செல்லாதது துரதிஷ்டமான சம்பவம்.

ஏனெனில் வடக்கு கிழக்கு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசம் பெண்கள் பல்வேறு பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து வருகின்ற நிலையில் அவர்களுக்கு குரல் கொடுப்பதற்கு பெண் பிரதிநிதி ஒருவர் பாராளுமன்றத்தில் இல்லை.

ஆண் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் இருந்தாலும் அவர்கள் பேச வேண்டும் என்பதற்காக பெண்கள் பிரச்சனைகளை கூறுவார்கள் அத்தோடு அவர்களின் நடவடிக்கை முடித்துவிடும்.

தமிழ் கட்சிகளைப் பொறுத்தவரை ஆளுமை மிக்க பெண்களை சந்தர்ப்பம் வழங்குவது அருகி வரும் நிலை காணப்படுகிறது ஏன் இதை நான் கூறுகிறேன் என்றால் திறமையான பெண்களை நிறுத்தினால் பாராளுமன்றம் சென்று விடுவார்கள்



அதே கட்சியில் போட்டியிடும் ஆண் வேட்பாளர்களுககு பாதகமாக அமைந்து விடும் எனச் சிந்திக்கிறார்கள்.

அவ்வாறான மனநிலையில் இருந்து கட்சிகள் மாற வேண்டும் பெண்களுக்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும் தகுதியான திறமையான பெண்கள் வேட்பாளராக நிறுத்தப்பட வேண்டும் மக்கள் அவர்களுக்கு ஆணை வழங்குவார்கள்.

ஆகவே வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் சார்ந்து பெண் பிரதிநிதி ஒருவரை பாராளுமன்றம் அனுப்புவதற்கு பெண்கள் முன்வருவதோடு ஆண்களும் அதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# Canadian High Commissioner for Sri Lanka Eric Walsh visits Mullaithivu

## முல்லைத்தீவு விஜயம் செய்த கனடா உயர்ஸ்தானிகர் அரசாங்க அதிபருடன் கலந்துரையாடல்

- ந.லோகதநாளன்

இலங்கை மற்றும் மாலைதீவுக்கான கனடா உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஸ் (Eric Walsh) கடந்த 15-10-2024 அன்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு விஜயம் செய்தார்.

மாவட்டச் செயலகத்தில் அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரனைச்



சந்தித்து மாவட்ட வளர்ச்சித் திட்டங்கள் தொடர்பாக அவர் கலந்துரையாடியுள்ளார்.



இக்கலந்துரையாடலின்போது அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டங்கள் தொடர்பிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு சவால்கள் பிரச்சினைகள் தொடர்பிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் காணப்படும் பல்வேறு அபிவிருத்தித் தேவைகள் தொடர்பாகவும் அரசாங்க அதிபரினால் கனடா உயர்ஸ்தானிகருக்கு விபரிக்கப்பட்டது.

இந்த சந்திப்பின் போது முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன், மற்றும் முல்லைத்தீவு மாவட்ட தொழித்துறை சார்ந்த அமைப்புப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# மன்னார் குருவில்வான் கிராமத்தில் வறிய குடும்பம் ஒன்றிற்கு இராணுவத்தினால் அமைக்கப்பட்ட புதிய வீடு கையளிப்பு



- எஸ்.ஆர்.லெம்பேட் (12-10-2024)

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள குருவில்வான் கிராமத்தில் வறிய குடும்பம் ஒன்றிற்கு இராணுவத்தினால் அமைக்கப்பட்ட புதிய





வீடு 12-10-2024 அன்றைய தினம் சனிக்கிழமை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டு குறித்த குடும்பத்தினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தின் 10வது கெமுனு கோவா படைப் பிரிவினால் அமைக்கப்பட்ட குறித்த வீடு தள்ளாடி 54 ஆவது படைப்பிரிவு கட்டளையிடும் அதிகாரி மேஜர் ஜெனரல் ஆர்.பி.ஏ.ஆர்.பி ராஜபக்ஷ தலைமையில் திறப்பு விழா இடம்பெற்றது.

இதன் போது குறித்த வீட்டை இராணுவத்தின் வன்னி கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜே.பி.சி.பீரிஸ் வைபவ ரீதியாக திறந்து வைத்து குறித்த குடும்பத்திடம் கையளித்தார்.

மேலும் குறித்த வீட்டு வளாகத்தில் மர நடுகை இடம்பெற்றது, குறித்த குடும்பத்திற்கு இராணுவத்தினால் பரிசுகள் வழங்கி வைக்கப்பட்டது.

# தென்பகுதி மக்கள் மாற்றத்தை விரும்பியதால் எமது மக்களும் இளைஞர்கள் அரசியலில் குதிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் உள்ளனர்



## வவுனியாவில் வேட்பாளர் சட்டத்தரணி எஸ்.டினேசன்



(16-10-2024)

தமிழரசு கட்சியானது எமது பாரம்பரிய கட்சி. தமிழர்களின் அடையாளம் வீட்டுச் சின்னம். தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்களினால் அடையாளம் காட்டப்பட்ட சின்னம் வீட்டுச் சின்னம். அவர் தமிழர்களின் அடையாளமாக கருதிக் கொண்டு உள்ளது வீடு. எனவே நீங்கள் அனைவரும் வீட்டுடன் பயணிப் பீர்கள் என எதிர்பார்ப்பதாக இலங்கை தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட இளம் வேட்பாளர் சட்டத்தரணி செல்வராஜ் டினேசன் தெரிவித்தார்.

வவுனியாவில் 16-10-2024 அன்று புதன்கிழமை மதியம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இடம் பெறுகின்ற தேர்தல்களில் இளைஞர்கள் போட்டியிட வேண்டும். மாற்றம் ஒன்றை கொண்டு வர வேண்டும் என அனைவரும் கூறுகின்றீர்கள்.

ஆனால் நீங்கள் அரசியலில் வர தயங்குகின்ற நேரத்தில் உங்கள் ஒவ்வொருவரிடமும் இருக்கும் ஆதங்கம் வன்னி தேர்தல் தொகுதியில் பிர மாவட்டங்களுடன் ஒப்பிடுகின்ற போது பல மாற்றங்கள் தென்படுகின்றது.

தென்பகுதி மக்கள் ஒரு மாற்றத்தை விரும்பிய பின்னர் எமது பிரதேச மக்களும் மாற்றம் ஒன்று வேண்டும். இளைஞர்கள் அரசியலில் குதிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் உள்ளனர்.

எமது கட்சியில் சில தன்னிச்சையான நடவடிக்கைகள் காரணமாக கட்சியில் திருப்தியின்மை காணப்படுகின்றது. தமிழரசு கட்சியானது எமது பாரம்பரிய கட்சி. தமிழர்களின் அடையாளம் வீட்டுச் சின்னம். எமது தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்களினால் அடையாளம் காட்டப்பட்ட சின்னம் வீட்டுச் சின்னம்.

அவர் தமிழர்களின் அடையாளமாக கருதிக்கொண்டு உள்ளது வீடு. எனவே நீங்கள் அனைவரும் வீட்டுடன் பயணிப்பீர்கள் என்று எனக்குத் தெரியும்.

என்னில் நம்பிக்கை வைத்து என்னுடன் பயணியுங்கள். முன்னைய அரசியல் பிரதிநிதிகளை விட இனி வரப்போகின்ற புதிய அரசியல் பிரதிநிதிகள் எதனை செய்ய வேண்டும் என்பது குறித்து சிந்தியுங்கள்.

எனவே நான் இலங்கை தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்டத்தில் மன்னாரில் இருந்து போட்டியிடுகின்றேன்.நீங்கள் ஒவ்வொருவரும் எனக்கு வாக்காளர்கள் மாத்திரம் இல்லாது எனக்கு தனிப்பட்ட முறையில் உங்கள் கிராமங்கள் ஊடாக ஆதரவு வழங்குங்கள். உங்கள் ஒவ்வொருவரினதும் முயற்சிகள் என்னை வெற்றியாளராக மாற்றும். அந்த நம்பிக்கையுடன் நான் ஓடிக் கொண்டுள்ளேன். உங்களிடமும் வந்துள்ளேன். என அவர் மேலும் தெரிவித்தார்.

வவுனியா சென்ற மன்னார் மாவட்டத்தின் இளம் வேட்பாளர் சட்டத்தரணி எஸ்.டினேசனுக்கு மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# தமிழ்க் கட்சிகள் வாய் திறக்குமா?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

கடந்த ஜூலை மாதம் 22 ஆம் தேதி தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பு என்று அழைக்கப்படும் ஓர் அமைப்பு யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் பிரகடனப்படுத்தப்பட்ட பொழுது அதில் உரையாற்றிய அரசியல் விமர்சகர் ஒருவர் பின்வருமாறு சொன்னார்... “பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த சீனாவின் தத்துவஞானியாகிய லாவோட் - Lao Tzu பின்வருமாறு கூறுவார்... மக்களிடம் செல்லுங்கள். மக்களிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள். மக்களோடு வாழுங்கள். மக்களுக்கு என்ன தெரியுமோ அதிலிருந்து தொடங்குங்கள். மக்களிடம் என்ன இருக்கின்றதோ அதிலிருந்து கட்டி எழுப்புங்கள். காரியம் முடியும் பொழுது; இறுதி இலக்கு எட்டப்படும் பொழுது; தலைவர்களுட் சிறந்தவர்களான மக்கள் சொல்வார்கள் நாங்களே அதைச் செய்தோம்” என்று.

பொதுக் கட்டமைப்பு ஜனாதிபதி தேர்தலில் ஒரு பொது வேட்பாளரை முன் நிறுத்தியது. அப்பொது வேட்பாளர் தமிழ் தேர்தல் வரலாற்றில் இதுவரை யாரும் பெறாத ஆகக்கூடியபட்ச வாக்குகளைப் பெற்று முதற்கட்ட வெற்றியை மக்களுக்கு பெற்றுக் கொடுத்தார். ஆனால் ஜனாதிபதி தேர்தல் முடிந்த சில நாட்களில் நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டது. அது மக்கள் அமைப்புக்கு சவாலாக மாறியது. அடுத்தடுத்து தேர்தல்கள் வரும் பொழுது மக்கள் அமைப்பு என்ன செய்யலாம் என்ற விவாதம் அமைப்புக்குள் தொடர்ச்சியாக இடம்பெற்றது. இரு வேறு கருத்து நிலைகள் காணப்பட்டன.

ஒரு தரப்பு கூறியது, பெற்ற வெற்றியை அடுத்த கட்டத்திற்கு மடைமாற்றி மக்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்று. திரட்டப்பட்ட மக்களை கைவிட முடியாது, தேரை இழுத்துக் கொண்டு வந்து தெருவில் விடக்கூடாது, பொது வேட்பாளரை நோக்கி குவிக்கப்பட்ட மக்கள் உற்சாகமாகவும் ஆர்வத்தோடும் எதிர்பார்ப்போடும் காணப்படுகிறார்கள், அவர்களுக்குப் பதில் சொல்ல வேண்டும். அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும். நிகழ்காலத்தைக் கையாளா விட்டால் எதிர்காலத்தைக் கையாள முடியாது.... என்றெல்லாம் வாதப் பிரதிவாதங்கள் எழுந்தன.

அந்த வாதத்தை மறுத்துப் பேசிய மற்றொரு தரப்பினர் ஒரு மக்கள் அமைப்பின் வேலை தொடர்ச்சியாக தேர்தலில் ஈடுபடுவது அல்ல, ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்களின் கூட்டுவிருப்பை வெளிப்படுத்துவதற்கான ஒரு பயிற்சிக் களமாகவே மக்கள் அமைப்பு கையாண்டது. அதை ஒரு தேர்தலாகக் கையாளவில்லை. அங்கு நிறுத்தப்பட்ட வேட்பாளர் ஒரு குறியீடு. அவர் தேசத்தை திரட்டுவதன் குறியீடு. எனவே பொவேட்பாளரை நோக்கி வாக்குகளை திரட்டுவது இலகுவானது. அந்த விடயத்தில் இணைக்கக்கூடிய கட்சிகளை இணைத்து கட்சிகளைக் கடந்து வாக்குகளை திரட்டுவதும் இலகுவானது. அதைத்தான் தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பு செய்தது. ஆனால் தொடர்ந்து தேர்தல்களை எதிர்கொள்வதற்கு கட்சிகளால் முடியும். மக்கள் அமைப்பினால் அது முடியாது. அதற்கு பின்வரும் காரணங்கள் உண்டு.

மக்கள் அமைப்பானது தேர்தல்களில் ஈடுபடுவதை மட்டும் தனது செயல்வழி ஒழுக்கமாகக் கொண்டிருக்கவில்லை. தேசத்தைக் கட்டி எழுப்புவது என்பது தேர்தல்களின் மூலம் மட்டும் செய்யப்படக்கூடிய ஒரு விடயம் அல்ல. அது தேர்தல்களுக்கும் அப்பால் ஆழமானது, நீண்ட கால நோக்கிலானது. இது ஒரு காரணம்.

இரண்டாவது காரணம், ஒரு மக்கள் அமைப்பானது கட்சிகளைப்போல செயல்படுவது என்றால் அந்த அமைப்பிடம் அதற்குரிய கட்டமைப்புகள் இருக்க வேண்டும். ஆனால் ஆறு மாதக் குழந்தையான மக்கள் அமைப்பிடம் அதற்குரிய பலம் இருக்கவில்லை. அதனால் ஜனாதிபதி தேர்தலில் கிடைத்த வெற்றிகளை ஒரு நாடாளுமன்ற தேர்தலில் போட்டு உடைக்கக் கூடாது என்ற ஒரு வாதம்.

மேலும், ஜனாதிபதி தேர்தல் வேறு நாடாளுமன்ற தேர்தல் வேறு. ஜனாதிபதி தேர்தலில் ஒரு வேட்பாளர், அவரும் குறியீடு. ஆனால் நாடாளுமன்ற தேர்தலில் நூற்றுக் கணக்கான வேட்பாளர்கள். அனைவருமே வாக்கை வேட்டையாடும் வெறியோடு களத்தில் இறங்குபவர்கள். ஜனாதிபதித் தேர்தலில் பிரச்சாரத்திற்கான சுலோகம் “நமக்காக நாம்”. நாடாளுமன்றத் தேர்தலில் அவ்வாறல்ல. “எனக்காக நான்”. ஜனாதிபதித் தேர்தலில் சுயநலம் ஒப்பீட்டளவில் குறைவு. நாடாளுமன்ற தேர்தல் முழுக்க முழுக்க தனி நபர்களின் வாக்கு வேட்டைக் களம். எனவே நாடாளுமன்றத் தேர்தலை அதற்குரிய ஏற்பாடுகளின்றி கையாள முடியாது என்று மக்கள் அமைப்பில் ஒரு பகுதியினர் தெரிவித்தார்கள்.

அதைவிட முக்கியமாக இங்கு யாரும் தேரை இழுத்துக் கொண்டு வந்து தெருவில் விடவில்லை என்று ஒரு அரசியல் விமர்சகர் சொன்னார். தேரானது, தேர் முட்டியில்தான் நிறுத்தப்பட்டுள்ளது. அது தெருவில் நிறுத்தப் படவில்லை. ஜனாதிபதி தேர்தல் என்ற கைங்கரியத்தைத் தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பு வெற்றிகரமாக செய்து முடித்திருக்கிறது. ஆனால் அந்த வெற்றியை ரசிக்கவும் கொண்டாடவும் முடியாதபடி அடுத்த தேர்தல் வரிசைகட்டி வந்து நிற்கிறது. இதுதான் பிரச்சனை.

எனவே மக்கள் அமைப்பு நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் மக்களுடைய எதிர்பார்ப்புகளை நிறைவேற்றி அவர்களை அடுத்தடுத்த கட்டத்திற்கு திரட்டுவதில் தனக்குள்ள சவால்களை மக்களுக்கு வெளிப்படையாக ஒரு ஊடகச் சந்திப்பின்போது தெரிவித்தது. மக்களின் எதிர்பார்ப்பை நிறைவு செய்ய முடியாமல் போனதையிட்டு வருத்தம் தெரிவித்தது. சில கிழமைகளுக்கு முன் தேசமாக திரட்டப்பட்ட மக்கள் நாடாளுமன்ற தேர்தலில் கட்சிகளாகவும் சுயேச்சைகளாகவும் சிதறடிக்கப்படுவதையிட்டும் மக்கள் அமைப்பு மக்களிடம் மன்னிப்பு கேட்டது.

இம்முறை தமிழர் தாயகத்தில், யாழ்ப்பாணத்தில் ஆறு ஆசனங்களுக்கு 396 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். வன்னியில் ஆறு ஆசனங்களுக்கு 459 வேட்பாளர்கள். மட்டக்களப்பில் ஐந்து ஆசனங்களுக்கு 392 வேட்பாளர்கள். திருகோணமலையில் நான்கு ஆசனங்களுக்கு 217 வேட்பாளர்கள். அம்பாறையில் ஏழு ஆசனங்களுக்கு 640 வேட்பாளர்கள்.

இப்புள்ளிவிபரம் எதைக் காட்டுகின்றது? சில கிழமைகளுக்குமுன் ஆகக்குறைந்தபட்சம் தேசமாகத் திரட்டப்பட்ட மக்கள் இப்பொழுது தேர்தல் களத்தில் சிதறுதேங்காயாக சிதறடிக்கப்படுகிறார்கள். பொதுக் கட்டமைப்பு தேர்தலில் ஈடுபட்டு கட்சிகளையும் சுயேச்சைகளையும் ஒருங்கிணைத்திருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பு மக்கள் மத்தியில் பரவலாக உண்டு. இந்த விடயத்தில் தமிழ்மக்கள் பொதுச்சபையின் அறிவிப்பு மக்கள் மத்தியில் சலிப்பையும் விரக்தியையும் கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது. அதனால்தான் தமிழ் மக்கள் பொதுச்சபையின் பிரதிநிதிகள் யாழ் ஊடக அமையத்தின் அது தொடர்பாக விளக்கம் அளித்துள்ளார்கள்.

மக்கள் சிதறுவதற்கு தமிழ் மக்கள் பொதுச் சபை காரணமே இல்லை. கட்சிகள் தான் காரணம். ஆனாலும் சில கிழமைகளுக்கு முன் மக்களை ஆகக் குறைந்தபட்சம் திரட்டிக் காட்டிய ஒரு கட்டமைப்பு, அடுத்து வந்த தேர்தலை ஏன் கையாளவில்லை என்பதற்கு விளக்கம் கூறியபோது மக்களுடைய உணர்வுகளை மதித்து அதற்கு மன்னிப்புக் கேட்டது. ஆனால் மன்னிப்புக் கேட்டிருக்க வேண்டியது கட்சிகள்தான். பொதுச்சபை அல்ல.

பொது வாழ்வில் மன்னிப்பு கேட்பது என்பது மாண்பு மிகுந்தது. பொது வாழ்வில் ஈடுபடும் பெரும்பாலான பிரமுகர்கள் மக்களுக்கு பொறுப்பு கூறுவதில்லை. கடந்த 15 ஆண்டுகளிலும் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள் எத்தனை தேர்தல்களை எதிர்கொண்டுள்ளன? எத்தனை தேர்தல் வாக்குறுதிகளை வழங்கியுள்ளன? அந்த வாக்குறுதிகளில் எத்தனை இதுவரை நிறைவேற்றப்பட்டுள்ளன? ஏனைய வாக்குறுதிகளை ஏன் நிறைவேற்ற முடியவில்லை? அதற்கு யார் பொறுப்பு? அதுமட்டுமல்ல, மக்கள் பிரதிநிதிகளாக வர விரும்பும் அனைவரும் தங்களுடைய சொத்து விவரங்களை மக்களுக்கு வெளிப்படுத்தத் தயாரா? இவற்றுடன் மேலும் ஒன்றைச் சேர்த்துக் கொள்ளலாம், ரணில் விக்கிரமசிங்கவோடு ரகசியமாக உறவுகளை வைத்துக் கொண்டவர்கள், பெட்டி கை மாறியவர்கள், டீலுக்குப் போனவர்கள், மதுச் சாலை அனுமதிகளைப் பெற்றவர்கள்.... என்று குற்றஞ்சாட்டப்படும் அனைவரும் மக்களுக்கு தன்னிலை விளக்கத்தைக் கொடுத்து பொறுப்புக் கூற வேண்டும்.

நிறைவேற்றப்பட்ட தமது தேர்தல் வாக்குறுதிகளுக்கு உரிமை கோரும் அரசியல்வாதிகள், அந்த வெற்றிகளைப் பிரகடனம் செய்யும் அவர்களுடைய விசுவாசிகள், தோல்விகளுக்கும் பொறுப்புக் கூற வேண்டும். குறிப்பாக தமிழ் அரசியலை கடந்த 15 ஆண்டுகளிலும் தேங்க வைத்தமைக்கு அதற்கு பொறுப்பான அனைவரும் பொறுப்புக் கூற வேண்டும். பன்னாட்டு விசாரணைள் முடிந்து விட்டனவா? தமிழ் மக்களின் நீதிக்கான போராட்டம் இப்பொழுது எங்கே நிற்கின்றது? போன்ற கேள்விகளுக்கு தமிழ் அரசியல்வாதிகள் பதில் கூற வேண்டும்.

அனைத்துலக சமூகத்திடம் தமிழர்களுக்கான நீதியை கேட்டு போராடும் பொழுது, இலங்கை அரசாங்கங்கள் இன அழிப்புக்கு பொறுப்பு கூற வேண்டும் என்று கேட்கும் தமிழ் அரசியல்வாதிகள், தமது வாக்காளர்களுக்கு பொறுப்புக் கூற வேண்டும். தாங்கள் நிறைவேற்றாமல் விட்ட வாக்குறுதிகளுக்காக மன்னிப்பு கேட்க வேண்டும்.

தனது செயல்களுக்கு பொறுப்பு கூறும் துணிச்சல் மக்கள் அமைப்பிடம் உண்டு என்பதனால் அது நாடாளுமன்ற தேர்தலில் மக்கள் சிதறடிக்கப்படுவதற்காக மன்னிப்பு கேட்டது. உண்மையில் அதற்கு மக்கள் அமைப்பு பொறுப்பில்லை. கட்சிகள்தான் பொறுப்பு. கடந்த 15 ஆண்டுகளாக தமிழ் மக்களைச் சிதறடித்தது கட்சிகள்தான். ஆனாலும் கட்சிகளின் பொறுப் பின்மைக்கு மத்தியில் ஜனாதிபதி தேர்தலில் மக்களை ஒன்று திரட்டிய மக்கள் அமைப்பானது நாடாளுமன்ற தேர்தலின் போதும் அதைச் செய்ய முடியாமல் போனதற்கு பொறுப்பு கூறியது. மன்னிப்பு கேட்டது. இந்த முன்னுதாரணத்தை பின்பற்றி தமிழ் கட்சிகள் தமது இறந்த காலத்துக்கு பொறுப்பு கூறுமா?

---

### வீணாவின் கவிக்கணை

அருமையான மானிடப்பிறப்பு,
இதை அழகாய் வகுத்து
அணு அணுவாய் ரசித்து
மகிழ்ந்திட நேரம்
இல்லை எவர்க்கும்?
ஓயாமல் ஓடுவது தான் எதற்கு?
அதற்கான விளக்கமும்
இல்லை இங்கு உனக்கு,
ஓடித்திரட்டியதை
அனுபவித்ததாகவும்
இல்லை கணக்கு,
பின்பு எது தான்
உன் இலக்கு,
அதையும்
நீ கொஞ்சம் விளக்கு.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# இலங்கை – இந்திய மீனவர் பிரச்சினை இம்மாத இறுதியில் கொழும்பில் பேச்சு

- நடராசா லோகதயாளன்

இலங்கை - இந்திய மீனவர்கள் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கு அரசாங்கம் புதிய முயற்சியொன்றை முன்னெடுத்துள்ளது. அதற்கமைய இருநாடுகளினதும் கடற்றொழில் அமைச்சுக்களுக்கிடையில் எதிர்வரும் 29 ஆம் திகதி கொழும்பில் விசேட பேச்சு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்ஷங்கரின் இலங்கை விஜயத்தின்போது இந்த பிரச்சினை தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டிருந்தது. குறிப்பாக, தென்னிந்திய மீனவர்கள் இழுவைப்படகுகள் மூலம் இலங்கையின் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன் பிடிப்பதால், இலங்கை மீனவர்கள் பெரும்பாதிப்புகளை எதிர்கொள்கின்றமை தொடர்பில் அரசாங்கம் சுட்டிக்காட்டியிருந்தது.

அதற்கமைய இந்த விவகாரம் இரு தரப்புக்கும் பெரும் பிரச்சினையாக உள்ளதாகவும், இம்மாதம் 29 ஆம் திகதி இலங்கை, இந்திய கடற்றொழில் அமைச்சுக்களுக்கு இடையில் 6 ஆவது தடவையாக பேச்சுகளை முன்னெடுத்து அதன் ஊடாக இருதரப்பு இணக்கப்பாட்டுடன்பொதுதீர்வொன்றை எட்டுவதற்கும் எதிர்பார்க்கப்படுவதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் முக்கிய உயரதிகாரியொருவரிடம் வினவியபோது. 29ஆம் திகதி இந்திய, இலங்கை மீனவர்கள் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்காக இரு நாட்டு கடற்றொழில் அமைச்சுக்களுக்கிடையிலான பேச்சுக்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. கூட்டுசெயற்குழு கூட்டத்தின்போது இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இதற்கு இந்தியாவிடமிருந்து பதில் கிடைத்துள்ளது.

எதிர்வரும் 29ஆம் திகதி எம்மால் கலந்துகொள்ள முடியுமா எனக் கேட்கப்பட்டிருந்தது. எம்மால் பங்கேற்க முடியும் என்று பதிலளித்திருக்கின்றோம். எவ்வாறிருப்பினும் பேச்சில் பங்கேற்கவுள்ள தூதுக்குழுவின்பட்டியலைக் கோரியிருந்தபோதிலும் அது இன்னும் கிடைக்கப்பெறவில்லை.

கொழும்பில் கடற்றொழில் அமைச்சால் இந்த பேச்சைநெறிப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்தியத் தூதுக்குழுபட்டியல் கிடைக்கப்பெற்றவுடன் அதற்கான ஏற்பாடுகள் துரிதமாக ஆரம்பிக்கப்படும். பதிலளித்தார்.

# இராணுவத்தின் 75 ஆவது தினத்தை முன்னிட்டு குறைந்த வருமானம் குடும்பத்தினருக்கு இராணுவத்தினரால் நிரந்தர வீடு ஒன்று கையளிப்பு



இராணுவத்தின் 75 ஆவது தினத்தை முன்னிட்டு குறைந்த வருமானம் குடும்பத்தினருக்கு இராணுவத்தினரால் புதிதாக நிரந்தர வீடு ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.





யாழ். பாதுகாப்பு கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்ரமசிங்க அவர்களின் எண்ணக் கருவுக்கு அமைவாக 55 வது காலாட் படை பிரிவின் வழிகாட்டலுக்கு அமைவாக. தேசியப் பாதுகாப்பு படையினரால் குறைந்த வருமானம் தரும் குடும்பத்தினருக்கு கிளிநொச்சி பனங்கண்டி பகுதியில் புதிதாக வீடு ஒன்று நிர்மாணித்து கையளிக்கப்பட்டது.

இலங்கை இராணுவத்தின் உயர் அதிகாரி விக்கும் லியனுகே அவர்களினால் 17.10.2024 அன்று வீட்டு உரிமையாளரிடம் கையளிக்கப்பட்டது.

# வதனம் மஞ்சரி – கனடா சிறப்பிதழ் வெளியீடு



- சுலோச்சனா அருண்

**செ**ன்ற ஞாயிற்றுக்கிழமை 13-10-2024 அன்று கிராமத்து வதனம் தமிழ் பெண்கள் பண்பாட்டு மையத்தின் ஆசிரியர் குழுவினரால் வெளியிடப்படும் காலாண்டுச் சஞ்சிகையான வதனம் இதழின் "கனடாச் சிறப்பிதழ்" ரொறன்ரோ 925 அல்பியன் வீதியில் உள்ள சமூக மையத்தில் வெளியிட்டு வைக்கப் பெற்றது.

"பெண்கள், மற்றும் இளைய தலைமுறையினர் எழுதும் சமையற் குறிப்புகள், எமது பாரம்பரிய விளையாட்டுகள், உணவு வகைகள், பயணக்கட்டுரைகள், தாங்கள் பிறந்த மண் பற்றிய ஆக்கங்கள், கவிதைகள், சிறுகதைகள் மற்றும் தாயகம், கனடா பற்றிய செய்திகள் போன்றவை மிகவும் பயனுள்ளதாகவும், இங்குள்ள இளைய தலைமுறையினர் அவற்றை அறிந்து கொள்ளக் கூடியதாகவும் இருப்பதால், வதனம் இதழ் சிறந்ததொரு இலக்கியப் பத்திரிகையாகக் கனடாவில் வெளிவருவதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. புலம் பெயர்ந்த மண்ணில் எங்கள் மொழியையும், பண்பாட்டையும் தக்க வைப்பதற்கு உதவியாகவும், சிறப்பாகவும் வெளிவரும் இந்த "வதனம்" இலக்கிய மஞ்சரி தொடர்ந்தும் நூல் வடிவில் எமக்கு வாசிக்கக் கூடியதாகக் கிடைப்பது எமது அதிஸ்டமே" என்று திருமதி நாகேஸ்வரி சிறிகுமரகுரு அவர்கள் கனடாச் சிறப்பிதழின் அறிமுக உரையில் குறிப்பிட்டார்.



தமிழும் சைவமும் இரு கண்கள் என்பதால், இந்த நிகழ்வின் போது இன்றைய இளைய தலைமுறையினரின் தேவை கருதி "பக்தி இலக்கியத் தூறல்" என்ற கைநூல் ஒன்றும் வெளியிடப்பட்டது. சிறுவர்கள் மற்றும் இளைய தலைமுறையினருக்கு இந்த நூல் இலவசமாகக் கொடுக்கப்பட்டது. இந்த நூலில் தெரிந்தெடுக்கப்பட்ட ஔவையாரின் விநாயகர் வணக்கம், சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் தேவாரங்கள், அருணகிரிநாதரின் திருப்புகழ், சேக்கிழரின் பெரியபுராணம், கச்சியப்பரின் கந்தபுராணம், மாணிக்கவாசகரின் திருவாசகம், பாரதியார் பாடல், விபுலானந்தர் பாடல், சரசுவதி அந்தாதி, அபிராமி அந்தாதி, திருக்கோணேசுவர, திருக்கேதீசுவரப் பதிகம் ஆகியன இடம் பெறற்றிருக்கின்றன.

"பெண்களுக்கும் இளைய தலைமுறையினருக்கும் ஊடகத்துறையில் பயிற்சி அளிப்பதற்காக "வதனம்" இதழை வெளியிடுகின்றோம். "பக்தி இலக்கியத் தூறலில்" உள்ள தேவாரங்களைப் பாடமாக்கி தைப்பொங்கல் போட்டியில் கலந்து கொள்பவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்" என்று வதனம் நிர்வாக ஆசிரியர் கமலவதனா சுந்தா அவர்கள் தனது உரையில் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் வதனம் இதழின் பிரதம ஆசிரியரான பிரபல எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்களை, அவரது தமிழ் இலக்கியப் பணியைப் பாராட்டி வதனம் இதழ் இணை ஆசிரியர்களான இளைய தலைமுறையினர் கௌரவித்திருந்தனர். அவர் தனது உரையில் "இளைய தலைமுறையினர் மிகுந்த ஆர்வத்தோடு ஊடகத்துறையில் ஈடுபடுவதையிட்டு மகிழ்ச்சியாக இருக்கின்றது. சிறுகதைப்பட்டறைப் பயிற்சி வகுப்புகளை நடத்தும்படி கேட்டிருந்தார்கள். அதை முன்னெடுத்ததன் விளைவாக அதில் பங்குபற்றிய ஆறு பேர் இதுவரை சிறுகதைகளை எழுதித் தந்திருக்கிறார்கள். ஏனையோரும் எழுதி முடித்ததும் ஒரு நூலாக வெளியிட்டுக் கனடிய தமிழ் பெண்களின் சிறுகதைத் தொகுப்பாகக் கனடியத் தமிழ் இலக்கியத்திற்கு அணி சேர்ப்போம்" என்று குறிப்பிட்டிருந்தார்.




## கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் நடத்தும் 2024 இற்குரிய விருது விழாவில் ஆறு கனடா வாழ் எழுத்தாளர்கள் கௌரவிக்கப்பெறுகின்றார்கள்

கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் நடத்தும் விருது விழா 2024
"வாழ்நாள் சாதனையாளர் விருது பெறும் எழுத்தாளர்கள்/ஆய்வாளர்கள்"
TAMIL WRITERS' ASSOCIATION OF CANADA PRESENTS AWARD EVENT – 2024


பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்


கலாநிதி கௌசல்யா சுப்ரமணிய ஐயர்


திரு. தேசபாரதி வே. இராசலிங்கம்


திரு. முருகேசு பாக்கியநாதன்


திரு. நாகமணி லோகேந்திரலிங்கம்


திரு. வயிரமுத்து திவ்வியராஜன்

அன்புடையீர்
அக்டோபர் 26, 2024 சனிக்கிழமை
பிற்பகல் 1:30 மணி முதல் மாலை 6 மணி வரை
விருதுவிழா–2024
ஸ்காபரோ சிவிக் சென்ரர் மண்டபத்தில்
(Scarborough Civic Centre Auditorium, 150 Borough Dr, Scarborough, ON M1P 4N7) நடைபெறவுள்ளது.
உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். நன்றி.
அன்புடன்
ரவீந்திரநாதன் கனகசபை , தலைவர் (kana -ravi@hotmail .com)
முனைவர் வாசுகி நகுலராஜா , செயலாளர் (vasuki .nagularajah@gmail.com
இராச்குமார் குணரட்ணம் , பொருளாளர் (rajgumar@gmail.com)

31 வது ஆண்டில் கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம்


LUNAR MOTION PICTURES
October 27 – SUN – 1:00 pm
woodside cinemas
Woodside Cinema (Special Screening)
ஆக்குவாய் காப்பாய்
Written & Directed by
MATHIVASAN
Line Producer
MUTHUKUMAR
QUBE
DOP THEEPAN RAJALINGAM - JEEVANRAM JEYAM Music RIJU KRISHNA Editor VICKY - MUHAN Story SAGAPTHAN
Technical Director P T CHANDRA KANTH DI BEBIN Publicity Designer KAMBAM SHANKAR


Plan
Design
Build
Paramount
Custom Homes Ltd.
Quality comes first
Build your Dream Home With Us
RESIDENTIAL / COMMERCIAL CONSTRUCTION
ARCHITECTURAL DRAWINGS
OBTAINING BUILDING PERMITS
REZONING
LAND SEVERANCE
FINANCING FOR CONSTRUCTION
EXPERIENCE - 10 + YEARS
Check out our showroom at 2400 MIDLAND AVE. UNIT 106
TORONTO, ON. M1S 5C1
416-335-5885
TARION CERTIFIED BUILDER
REGISTERED BUILDER
TARION
TARION WARRANTY CORPORATION

# 31ம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் :
17-12-1951

விண்ணில்:
18-09-2024



திரு R.M. தியாகராஜா
இரத்தினகுமார்

யாழ் சித்தன்கேணியை பிறப்பிடமாகவும், ஜெர்மனியில் லண்டோ மற்றும் எசன் நகரங்களை வாழ்விடங்களாகவும் கொண்டிருந்து கடந்த 18.09.2024 அன்று ஜெர்மனியில் Essen நகரில் அமரத்துவம் அடைந்த R.M. தியாகராஜா இரத்தினகுமார் அவர்களின் ஆத்மா சாந்திக்காக அவரது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் சேர்ந்து பிரார்த்திக்கின்றனர்.

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நேரிலும், தொலைபேசி, முகநூல், மின்னஞ்சல் வாயிலாக எமக்கு ஆறுதல் கூறி அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மருத்துவர்களுக்கும், தாதியர்களுக்கும், உற்றார் உறவினர் நண்பர்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

*குடும்பத்தினர்.*

தகவல் அ.ஆதித்தன் (நண்பன்)
**+1-519-222-5191**



# AQUA WELLNESS CENTRE LIMITED
REHABILITATION CLINIC


# INJURED?

CALL US TODAY
OVER 15 YEARS OF EXPERIENCE
IN PERSONAL INJURY.

- EXTENDED HEALTH CARE ( DIRECT BILLING )

- WSIB
- SLIP & FALL
- PRIVATE CLIENTS
- SPORTS INJURY
- MOTOR VEHICLE ACCIDENT

KENEDY AND SHEPPARD AVE. E
OFF KENNEDY ROAD.






AQUA WELLNESS CENTRE LTD.
100 COWDRAY COURT SUIT 140
TORONTO, ON. M1S 5C8

T: 416-463-9090 C: 647-972-7126
F: 416-363-9090

# 10வது ஆண்டு நினைவஞ்சலி



**மண்ணில் பிறப்பு:**
29 - 11 - 1977

**விண்ணிற்கு பறப்பு:**
9 - 11 - 2014

# திருமதி. கேமலதா விக்னராஜ்

யாழ்ப்பாணம் புதுச் செம்மணி வீதி கல்வியங்காட்டை சேர்ந்த
நடராஜா சந்திரா - சந்திரா சிவலோஜினி தம்பதியரின் புதல்வியும்,
கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், கனடா அஜெக்ஸ் நகரை வதிவிடமாகவும் கொண்டிருந்த
திருமதி. கேமலதா விக்னராஜ் அவர்களின் 10வது ஆண்டு நினைவஞ்சலி.

*அன்பின் திருவுருவாய் ஆண்டுகள் முப்பத்தி ஏழு*
*எம்மோடு வாழ்ந்தாய் இதயங்களைக் கவர்ந்தாய் கேமா!*
*துன்பங்கள் வந்தாலுந் துவண்டாத இரும்புப் பெண்*
*தூரவே போய்விட்டாலும் தினமும் உன்னைக் கனவில் காண்கின்றோம்*
*என்புருகிப் போய் இன்று பத்து ஆண்டுகள் ஆகினவே*
*எத்தனை இரவுகள் கழிந்தாலும் எமக்கு பகலாகத் தெரிகின்றாய்*
*உன் வயிற்றில் உதித்த செல்வங்கள் இப்போது எம் அருகே*
*உலகத்தை வென்றவராய் திகழ்கின்றார்கள் உனக்கும் பெருமைதான்!*

*நீயில்லா உலகம் எமக்கு நிம்மதியைத் தர மறுக்கின்றது*
*நித்தமும் உன் முகத்தை அசையாத உருவமாய் காண்கின்றோம்*
*தீயிலெரிந்த கானகம் போல் எம் முன்னால் வெறுமையே மிச்சம்*
*தாய்மையின் இலக்கணமாய் தாய் தந்தையரை போற்றியே வாழ்ந்தாய்*
*உயிராய் மதித்து உடன் பிறந்த உறவுகளை கலங்காமல் பேணி வந்தாய்*
*உத்தமி என்றும் பெயரெடுத்து உன்னவனின் இதயத்தில் தேனைத் தெளித்தாய்*
*காயிருந்த மரத்தில் கனியைக் காணா ஏக்கத்தை உன் இழப்பு தருகின்றது*
*காலம் கடந்தாலும் எம்மை அது வருத்தியே தொடரும்!*

*உன் பாதம் பதிந்த புற்தரைகள் பின்தோட்டத்தில் நீ ரசித்த பூச்செடிகள்*
*உயிராய் நீ நேசித்த உறவுகளின் இதயங்கள் உன்னை இழந்த துயரத்தில்*
*தன்னலம் கருதாமல் வாழ்ந்த நாட்களை நீ மகிழ்வோடு ஏற்று நின்று*
*தவிக்க விட்டுச் சென்றாய் உன்னை நேசித்தவர்கள் அனைவரையும்*
*இன்னும் நாம் உண்ணும் போதும் உறங்கும் போதும் உன் நினைவோடுதான்*
*இலகுவில் கிட்டாத ஒரு அரிய பொக்கிசம் எம் கரம் விட்டுச் சென்றதுபோல்*
*கண்மணியே உன் பிரிவை தாளாத் துயருடன் அனுபவிக்கும் காலம்*
*எம் உயிர் உள்ளவரை தொடரும் அது வரை நீ எம்மோடுதான்!*

உன் நினைவால் வாடும் பாசமுள்ள அப்பா, அம்மா, அன்புக் கணவர், பிள்ளைகள்,
சகோதர, சகோதரரிகள், மைத்துனர், மருமக்கள், பெறாமக்கள் மற்றும் உறவினர்கள்

தொடர்புகளுக்கு: (647) 335-5841, (416) 754-7485



# "சங்கு" கள்வர்களும் "வீட்டு" திருடர்களும்

**"தமிழர் தேசம், சமஷ்டி, சுயாட்சி, அதிகார பரவலாக்கம், தைப்பொங்கலுக்குள் தீர்வு, தீபாவளிக்குள் தீர்வு,13ஐ அமுல்படுத்தல், அரசியல் கைதிகள் விடுவிப்பு, காணிகள் விடுவிப்பு, காணாமல் போனோர் கண்டுபிடிப்பு. போர்க் குற்றவாளிகள் தண்டிப்பு சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கை என தமிழ் மக்களின் நாடி, நரம்புகளில் எல்லாம் உசுப்பேற்றி பிரசாரம் செய்து வாக்குகளைக் கொள்ளையடித்த இந்த "புலித்தோல் போர்த்திய நரிகள்" தற்போது "சங்குக் கள்வர்கள்", "வீட்டுத் திருடர்கள்". "பார்க்காரர்கள்", "மாம்பழத் திருடர்கள்" எனக் கோஷமிட்டுக் கொண்டு மிகவும் அசிங்கமான "சேறடிக்கும்" அரசியல் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர்"**

**------------------------------------------------------------ - கே. பாலா ----**

ஜனாதிபதித் தேர்தலில் ஒவ்வொரு கட்சி வேட்பாளர்களையும் பிளவுபட்டு நின்று ஆதரித்து "நவக்கிரகங்கள்" போல் செயற்பட்டு "எம்மை அந்த ஆண்டவினாலும் ஒற்றுமைப்படுத்த முடியாது" என்பதை சிங்கள தேசத்துக்கும் சர்வதேசத்துக்கும் அம்பலப்படுத்தி தமிழ் தேசிய இனத்தை தலைகுனிய வைத்த "தமிழ் தேசியக்கட்சிகள்" என்ற "புலித்தோல் போர்த்திய நரிகள்" எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலிலிலும் கட்சிகளாகவும் சுயேட்சைக் குழுக்களாகவும் பிரிந்து நின்று ஒருவருக்கொருவர் சேற்றை அள்ளி வாரியிறைத்து தமிழர் அரசியலை "நாற்றம்" எடுக்க வைத்து வருகின்றனர்.

எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத்திற்கான தேர்தலில் போட்டியிடுவதற்காக வடக்கு மாகாணத்திலுள்ள யாழ் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ்ப்பாண மாவட்ட தேர்தல் தொகுதியில் 23 அரசியல்கட்சிகள், 21 சுயேட்சைக் குழுக்களின் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் 6 பாராளுமன்ற ஆசனங்களுக்காக 396 வேட்பாளர்களும் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னிமாவட்ட தேர்தல் தொகுதியில் 24 கட்சிகள், 27 சுயேச்சை குழுக்களின் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் 6 பாராளுமன்ற ஆசனங்களுக்காக 423 வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர். இதற்கமைய வடக்கு மாகாணத்திலுள்ள 12 பாராளுமன்ற ஆசனங்களுக்காக 819 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இதே போன்று கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு தேர்தல் மாவட்டத்தில் 22 கட்சிகளினதும் 27 சுயேச்சைக் குழுக்களினதும் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிலையில் 5 பாராளுமன்ற ஆசனங்களுக்காக 392 வேட்பாளர்களும் திருகோணமலை தேர்தல் மாவட்டத்தில் 14 கட்சிகளினதும் 17 சுயேச்சைக் குழுக்களினதும் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிலையில் 4 பாராளுமன்ற ஆசனங்களுக்காக 217 வேட்பாளர்களும் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் (அம்பாறை மாவட்டம்) 20 கட்சிகளினதும் 44 சுயேச்சைக் குழுக்களினதும் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிலையில் 7 பாராளுமன்ற ஆசனங்களுக்காக 640 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர் இதற்கமைய கிழக்கு மாகாணத்திலுள்ள 16 பாராளுமன்ற ஆசனங்களுக்காக 1249 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இதற்கமைய வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள 28 பாராளுமன்ற ஆசனங்களுக்காக 2068 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இதனால்தான் தமது பாராளுமன்ற ஆசனத்திற்கு ஆபத்து வந்து விடுமோ என்ற அச்சத்திலும் மீண்டும் பாராளுமன்ற உறுப்பினராகாது விட்டால் அரசியலில் காணாமல் போய் விடுவோம் என்ற கலக்கத்திலுமே இதுவரை தமிழ் தேசியம் பேசியவர்கள் எல்லாம் அதனைத் தூக்கி தூர வீசிவிட்டு தமிழ் தேசியத்தை நாறடிக்கும் அரசியலை கையில் எடுத்துள்ளனர்.

கடந்த பாராளுமன்றத் தேர்தல்களில் "தமிழர் தேசம், சமஷ்டி, சுயாட்சி, அதிகார பரவலாக்கம், தைப்பொங்கலுக்குள் தீர்வு, தீபாவளிக்குள் தீர்வு, 13ஐ அமுல்படுத்தல், அரசியல் கைதிகள் விடுவிப்பு, காணிகள் விடுவிப்பு, காணாமல் போனோர் கண்டுபிடிப்பு. போர்க்குற்றவாளிகள் தண்டிப்பு சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கை என தமிழ் மக்களின் நாடி, நரம்புகளில் எல்லாம் உசுப்பேற்றி பிரசாரம் செய்து வாக்குகளைக் கொள்ளையடித்த இந்த "புலித்தோல் போர்த்திய நரிகள்" தற்போது அந்த புலித் தோலைக் கழற்றிவிட்டு அம்மணமாக நின்று "சங்குக் கள்வர்கள்", "வீட்டுத் திருடர்கள்". "பார்க்காரர்கள்", "மாம்பழத் திருடர்கள்" எனக் கோஷமிட்டுக் கொண்டு மிகவும் அசிங்கமான அரசியல் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.



எந்தவொரு தமிழினத் துரோக வேலைகளுக்கும் ஆரம்ப புள்ளியிடுவது இலங்கை தமிழரசுக் கட்சியின் ஊடக பேச்சாளரான எம்.ஏ. சுமந்திரனின் தலையாய பணி என்பதனால் அவர் தான் தற்போதைய பாராளுமன்றத் தேர்தல் பிரசாரக் களத்திலும் "சங்குக் கள்வர்கள்", "பார்க்காரர்கள்", "மாம்பழத் திருடர்கள்" கோஷத்தை பிரதான பிரசாரமாக்கி தமிழ் தேசிய இனத்தையும் தமிழ் தேசிய அரசியலையும் நாற்றமெடுக்க வைத்து ஏனைய சிங்கள, முஸ்லிம் சமூகங்கள் தமிழ் சமூகத்தை மிகவும் கீழ்த்தரமாக, இழிவாக, அருவருப்பாக பார்க்கும், பேசும் நிலைமையை ஏற்படுத்தியுள்ளார்.



ஜனாதிபதித் தேர்தலில் பொதுக் கட்டமைப்பினாலும் தமிழ் சிவில் சமூகத்தினாலும் தமிழ் பொது வேட்பாளர் களமிறக்க எடுக்கப்பட்ட முடிவை முந்திரிக்கொட்டைபோல் முந்திக்கொண்டு யாழ்ப்பாணத்தில் கூட்டம் நடத்தி "பொதுவேட்பாளரை தோற்கடித்தே தீருவேன்" என சபதமிட்டு தமிழர் அரசியலை மலினப்படுத்தி சந்தி சிரிக்க வைத்தது போலவே தற்போதைய பாராளுமன்றத் தேர்தலிலும் தனது முதல் பிரசாரக் கூட்டத்திலேயே அருவருப்பான அரசியலை முன்னெடுத்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் "நாற்றமடிக்கும்" அரசியல் கலாசாரத்தை சுமந்திரனே ஆரம்பித்து வைத்துள்ளார்.





இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட வேட்பாளர் அறிமுக விழா யாழ். தந்தை செல்வா மண்டபத்தில் நடைபெற்றபொது அதில் உரையாற்றிய சுமந்திரன், "ஜனாதிபதித் தேர்தலோடு ஓர் ஆபத்து வந்திருக்கின்றது. பல தடவைகள் நாங்கள் அபாயச் சங்கை ஊதினோம். அது கைமீறிவிட்டது. பொதுவான "சங்கு" சின்னத்தையும் திருடி விட்டார்கள். சின்னத்தைத் திருடியவர்கள் அதற்கு முன்னர் எங்களுடைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரைத் திருடினார்கள். திருடுவது என்பது அவர்களுடைய வாழ்க்கை வழிமுறையாகவே இருந்திருக்கின்றது. ஒரு காலகட்டத்தில் திருடர்களாக, கப்பம் பெற்றவர்களாக, கடத்தல்காரர்களாக, கொள்ளையர்களாக, கொலையாளிகளாக இருந்தவர்கள் திருந்திவிட்டார்கள் என்று நம்பி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் சேர்த்து வைத்திருந்தோம். ஆனால், அவர்கள் திருந்தவில்லை. கட்சிப் பெயரைத் திருடினார்கள். மக்களுக்குப் பொய்யான நம்பிக்கையை ஊட்டி "சங்கு" சின்னத்தையும் திருடி விட்டார்கள்.

கடந்த மாதம் 23ஆம் திகதி நள்ளிரவில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. அதற்கு முன்னர் "சங்கு" சின்னத்தைத் தாம் பயன்படுத்த மாட்டோம் என்று ஒரு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. அவர்களுக்கு தங்களின் கையெழுத்தின் பெறுமதி தெரியவில்லை. சின்னத்தைத் திருட மாட்டோம் என்று கையெழுத்திட்டவர்கள் ஒரு சில மணித்தியாலங்களுக்கு உள்ளேயே குத்துவிளக்கைக் கைவிட்டு சங்கைத் தருமாறு தேர்தல் திணைக்களத்துக்குக் கடிதம் கொடுத்தார்கள். இவ்வாறான சங்கு கள்ளருக்கு இம்முறை மக்கள் தகுந்த பாடம் கற்பிக்க வேண்டும். மாம்பழத் திருடர்களுக்கும் மக்கள் பாடம் புகட்ட வேண்டும்.

எங்கள் கட்சியிலிருந்து வெளியேறிய ஒருவர் அபலைப் பெண்ணுக்கு மதுபானசாலை உரிமம் கொடுத்தேன் என்று வெளிப்படையாகவே கூறியிருக்கின்றார். ஊழலுக்கு எதிரான அரசு என்று சொல்லிக் கொண்டிருக்கக் கூடிய இந்த அரசு இரண்டு விடயங்களில் தடுக்கி விழுந்து கொண்டிருக்கின்றது. ஒன்று ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமான செலவீனங்களைத் தேர்தல் திணைக்களத்துக்கு இதுவரை கொடுக்கவில்லை. மற்றையது மதுபான அனுமதிப் பத்திரங்களைப் பெற்றவர்களின் பெயர் விவரங்களை மூன்று நாட்களுக்குள் வெளிப்படுத்துவோம் எனக் கூறினார்கள். மூன்று வாரமாகிவிட்டது, இன்னும் வெளிப்படுத்தவில்லை. நான் பகிரங்கமாக அரசுக்குச் சவால் விடுகின்றேன் மதுபான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றவர்களின் விபரங்களை வெளிப்படுத்துங்கள்" என்று பேசியுள்ளார்.

2001ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒரு பொதுக் குடையின் கீழ் போட்டியிடுவதற்காக தமிழ் தேசியக்கூட்டமைப்பு 2001 அக்டோபரில் விடுதலைப் புலிகளின் பின்னணியுடன் உருவாக்கப்பட்டது. இதில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஈ.பி.ஆர்.எல்.எப்), தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய கட்சிகளிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டே உருவாக்கப்பட்டது. பின்னாளில் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகமும் (புளொட்) இதில் இணைத்துக் கொள்ளப்பட்டது.



(தொடர்ச்சி 19 பக்கம்)

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மட்டக்களப்பில் 2 இலட்சம் ரூபா இலஞ்சம்வாங்கிய இறைவரிதிணைக்கள அதிகாரி ஒருவர் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் கைது

கனகராசா சரவணன்

மட்டக்களப்பில் காணி தொடர்பாக இரண்டு இலச்சம் ரூபா இலஞ்சம் வாங்கிய உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர் ஒருவரை 15-10-2024 செவ்வாய்க்கிழமை அன்று கல்லடி பகுதியில் வைத்து இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இதுபற்றி தெரியவருவதாவது, காத்தான்குடி பிரதேசத்தைச் சோந்த ஒருவர் காணி ஒன்றை கொள்வனவு செய்தமைக்கான வரி தொடர்பாக 2 இலச்சம் ரூபா பணத்தை இலஞ்சமாக கோரியுள்ளார்.

இதனையடுத்து காணி கொள்வனவு செய்தவர் கொழும்பிலுள்ள இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்ததையடுத்து அவர்களின் ஆலோசனைக்கமைய சம்பவதினமான அன்று பகல் கல்லடியிலுள்ள உள்நாட்டு இறைவரி திணைக்களப் பகுதியில் மாறு வேடத்தில் கொழும்பில் இருந்து வந்த இலஞ்ச ஊழல் ஒழிப்பு பிரிவினர் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இதன் போது குறித்த காரியாலயத்துக்கு வெளியில் வைத்து 2 இலச்சம் ரூபாவை இலஞ்சமாக பெற்றுக் கொண்டபோது அங்கு மாறுவேடத்தில் இருந்த இலஞ்ச ஊழல் ஒழுப்பு ஆணைக்குழுவினர் சுற்றிவளைத்து மடக்கி பிடித்து கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்பட்டவர் அனுராதபுரத்தைச் சோந்தவர் எனவும் இலஞ்ச ஊழல் ஒழிப்பு பிரிவினரது ஆரம்பகட்ட விசாரணில் தெரியவந்துள்ளதுடன் இவரை மட்டக்களப்பு நீதிமன்றில் ஆஜர்படுத்திய பின்னர் கொழும்புக்கு அழைத்து செல்லப்பட்டு புதுக்கடை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துவருவதாக அவர் தெரிவித்தார்.

# மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை நலன்பரி சங்கத்தில் 58 இலச்சம் ரூபா மோசடி தொடர்பாக விசேட பிரிவு பொலிசார் விசாரணை

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை கூட்டுறவு நலன்புரி சங்கத்தில் கடந்த 5 வருடங்களாக இடம்பெற்றுள்ள 58 இலச்சத்து 5 ஆயிரத்து 853 ரூபா நிதி மோசடி தொடர்பான விசாரணைகளை மட்டக்களப்பு மாவட்ட விசேட நிதி மோசடி விசாரணை பிரிவு பொலிசார் மேற்கொண்டுவருகின்றதாக பொலிசார் தெரிவித்தனர்.

குறித்த கூட்டுறவு சங்கத்தின் புதிய நிர்வாகம் 2024ம் ஆண்டு பெறுப்பேற்றதையடுத்து நிதி தொடர்பாக ஆராய்ந்த போது நிதி மோசடி இடம்பெற்றுள்ளமை கண்டறியப்பட்டதையடுத்து அப்போது சங்கத்தின் பொருளா-ராக இருந்தவருக்கு எதிராக மாவட்ட விசேட நிதி மோசடி விசாரணை பிரிவு பொலிசாருக்கு புதிய நிர்வாகம் முறைப்பாடு செய்ததையடுத்து இந்த மோசடி தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது இந்த சிக்கன நலன்புரி சங்கத்தில் வைத்தியசாலையில் கடமையாற்றும் சுமார் ஆயிரம் பேருக்கு மேலாக உறுப்பினர்களாக இருப்பதுடன் மாதாந்தம் சம்பளத்தில் ஆயிரம் ரூபாவை சந்தா பணமாக செலுத்திவருகின்றனர்.

இந்த நிலையில் வைத்தியசாலையில் கடமையாற்றிவரும் ஆண் பரிசாதகர் (அற்றன்டன்) கூட்டுறவு நலன்புரி சங்கத்தில் பொருளாளராக பெறுப்பேற்று 2019 தொடக்கம் 2023 வரையான காலப்பகுதிவரை கடமையாற்றி வந்துள்ளதுடன் சங்க நிர்வாகத்தில் கடமையாற்ற வைத்தியசாலையை விட்டு வெளியாள் ஒரு பெண் ஒருவரை நியமித்து மாதாந்த சம்பளத்துக்கு கடமைக்கு அமர்தப்பட்டுள்ளார்.

இதன்போது பொருளாளர் சங்கத்தின் உறுப்பினர் பலரின் பெயரில் அவர்களுக்கு தெரியாமல் கடன் விண்ணப்பங்களை பூர்த்தி செய்து கடன் பெற்று பணத்தை மோசடி செய்து வந்துள்ளார்.

இவ்வாறு பொருளாளர் அவரது உதவிக்கு நியமித்த பெண் ஆகியோர் கடந்த 5 வருடத்தில் 58 இலச்சத்து 5 ஆயிரத்து 853 ரூபா நிதி மோசடி செய்துள்ளது என மாவட்ட விசேட நிதி மோசடி விசாரணைப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பல விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதையடுத்து மோசடியில் ஈடுபட்ட சங்கத்தின் முன்னாள் பொருளாளர் மோசடி செய்த பணத்தில் 39 இலச்சம் ரூபா பணத்தை திரும்ப ஒப்படைத்துள்ளதுடன் அவருடன் சேர்ந்து மோசடியில் ஈடுபட்ட அங்கு கடமையாற்றிவந்த பெண் 19 இலச்சம் ரூபாவை இதுவரை ஒப்படைக்கவில்லை.

இருந்தபோதும் இந்த பாரிய நிதி மோசடி தொடர்பான மேலதிக விசாரணைகளை விசேட நிதி மோசடி விசாரணைப் பிரிவினர் மேற்கொண்டு வருவதுடன் இந்த மோசடியில் ஈடுபட்டவர்களை கைது இவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தொடர்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றனர்.

இதேவேளை வைத்தியசாலையில் இயங்கிவரும் இன்னொரு கூட்டுறவு சங்கத்தில் கோடிக்கணக்கான பண மோசடி இடம்பெற்றுள்ளதாகவும் கூட்டுறவு நலன்புரி சங்கத்தில் பொருளாளராக இருந்து மோசடி செய்தவர் அந்த சங்கத்தில் இருந்துள்ளதாகவும் சங்க யாப்பின்படி கடந்த யூலை மாதம் சங்க பொதுக் கூட்டம் கூட்டப்படவேண்டிது இன்னமும் கூட்டாமல் இருக்கின்றதாக சங்க உறுப்பினர்கள் கவலை தெரிவித்துள்ளதை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கில் ஒரு அரசியல் எழுச்சி!

## மட்டக்களப்பில் தேர்தலில் போட்டியிடும் தமிழ் கொடி சமூக அமைப்பினரின் சுயேச்சைக்குழு 11



தமிழ் மக்களுக்கு எந்தவொரு இடையூறுகளும் இன்றி சேவை செய்வதற்கு கட்டாயம் அரசியல் தேவைப்படுகின்றது அதற்காக மட்டக்களப்பில் தமிழ் கொடி சமூக அமைபினர் சுயேச்சை குழு 11 இலக்கத்தில் தேர்தலில் போட்டியிடுகின்றோம் எனவே தேர்தலில் வெற்றி பெற்றாலும் தோல்வியடைந்தாலும் மக்களுக்கான சமூக சேவையை தொடர்ந்து எமது அமைப்பு சேவை செய்துவரும் என சுயேச்சைக்குழு 11 தாயக்கட்டை சின்னத்தில் போட்டியிடும் தலைவர் பொன்னுத்துரை சுதர்சன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வெஸ்ஒப் மீடியாவில் 16-10-2024 அன்று புதன்கிழமை இடம்பெற்ற சுயேச்சைக் குழு 11 வேட்பாளர் அறிமுகமும் ஊடக மாநாடும் இடம்பெற்றது இதன் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பொன்னுத்துரை சுதர்சன் தலைமையில் சிங்கராசா மதவாணன், செல்வராசா அமுதினி, சாமித்தம்பி வேலாயுதம், சிவலிங்கம் லோகேஸ்வரன், அமரசிங்கம் வினாயகமூர்த்தி, குணராசா ஜெகதீஸ்வரன், நித்தியானந்தன் நிமல்ராஜ் ஆகிய 8 பேர் வேட்பாளராக களமிறங்கியுள்ளனர் இவர்களில் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள் கல்விமான்கள் இளைஞர்கள் உள்ளடங்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்திலே தமிழ் கொடி அமைப்பு ஊடாக சமூக சேவை செய்து கொண்டிருந்த சகோதரி ஒருவர் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ஒன்றரை வருடங்களாக சிறையில் இருந்தார். ஆகவே சமூக சேவையை செய்ய வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு இருந்ததன் காரணமாக அதற்கு எந்தவொரு இடையூறுகளும் இன்றி மக்களுக்கு சேவை செய்வதற்கு அரசியல் அதிகாரம் தேவைப்படுகின்றது.

இலங்கையை பொறுத்த வரையிலே வடக்கு கிழக்கு மற்றும் மலையக பகுதியில் கடந்த எட்டு வருடங்களுக்கு மேலாக சமூக சேவையினை திறன்பட கல்வி வளர்ச்சி சமூக வளர்ச்சி வேலை வாய்ப்புகள் தொழில்நுட்ப வளர்ச்சி போன்ற சகல வகையிலும் எமது சமூக மக்களை முன்னேற்றுவதற்காக இலங்கையிலும் சரி புலம்பெயர்ந்த நாடுகளிலும் சரி முதலீட்டாளர்களின் பங்களிப்புடன் செயற்பாட்டாளர்கள் உதவி செயற்பாட்டாளர்கள் ஊழியர்கள் போன்ற ஒரு கட்டமைப்பினை அடிப்படையாக வைத்து திறம்பட சேவை செய்துவருகின்றோம்.

இதன் காரணணமாக சமூக அமைப்பாக மக்கள் மனதில் குடிகொண்ட அமைப்பு தற்பொழுது அரசியல் களத்திலே களமிறங்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது அது மக்களுக்கு சிறந்த ஊழல் அற்ற சமூகசேவையை செய்வதற்காக அரசியிலில் இறங்கியுள்ளோம் எனவே மக்கள் உங்கள் ஆதரவை வழங்குங்கள் என அன்புடன் உரிமயுடன் கேட்டுக் கொள்கின்றோம்.



இந்தியா செய்திகள்
India News

# சென்னையில் நடைபெற்ற நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் பிறந்த நாள் — சிறப்பு நிகழ்ச்சி



நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் பிறந்த நாள் - சிறப்பு நிகழ்ச்சியாக 08.10.2024 அன்று சென்னை - அண்ணா நூற்றாண்டு பல்கலைக் கழக வளாகத்தில் கவியரசு கண்ணதாசன் தமிழ்ச் சங்கம் (பம்மல்) சார்பில் வெகு விமரிசையாக நடைபெற்றது.



விழாவில் முதல் நிகழ்ச்சியாக திரு.வி.ராகவேந்தர் கைவண்ணத்தில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் நடித்த திரைப்படங்களிலிருந்து சிறப்புக் காட்சிகள் தொகுப்பு ஒளிபரப்பப்பட்டது.

நிகழ்ச்சிக்கு சிவாஜியின் அதிதீவிர ரசிகரும் சமூகக் காவலருமான திரு.சிவாஜி ரவி அவர்கள் தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் பல்வேறு கலையுலகப் பிரமுகர்கள் - இயக்குனர் வி.சி.குகநாதன், வசனகர்த்தா பால முருகன் அவர்களின் மகன் திரைக்கதை வசனகர்த்தா திரு.பூபதி ராஜா, முனைவர் தென்காசி கணேசன், சர்வதேச ஊடகவியலாளர்திரு. சிவா பரமேஸ்வரன், திரு. வி.ராகவேந்தர், திரு. முரளி சீனிவாஸ், பிரபல பின்னணி பாடகர் பி.பி. சீனிவாஸ் அவர்களின் புதல்வர் பி.பி.பணீந்தர், முனைவர் ரவி தமிழ்வாணன் மற்றும் திவ்யா பிலிம்ஸ் சொக்கலிங்கம் பங்கேற்று உரையாற்றினர்.





மேலும் கனடா வாழ் எழுத்தாளர் திரு. வீணைமைந்தன் அவர்கள் எழுதிய நடிகர் திலகம் சிவாஜியும் தமிழ் சினிமாவும் நூல் வெளியிடப்பட்டது. கவிஞர் காவிரிமைந்தன் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்

SAREGA MUSIC SCHOOL OF FINE ARTS Non Profit Corporation

NON-PROFIT Corporation
Established in 2001

SAREGA MUSIC இசைப்பள்ளி - 24-வது ஆண்டில் !!!
நியூ யார்க் ராஜா - இசை அமைப்பாளர்/ஆசிரியர்
HAPPY NAVARATHIRI
விஜய தசமி | Oct 12, Saturday 2024
புதிய வகுப்புகள் ஆரம்பம். உடனே பதிவு செய்யவும்
Keyboards & Guitar - சினிமா பாடல்கள்
Please Call 416 884 7288 Or Email to Register ASAP!
Email: learn@saregamusic.com
வீட்டிலிருந்தே வசதியாக Zoom வழியாக இசையை கற்கலாம்.



New York-Raja
Award Winning Music Composer & Teacher



Ginersh



Vignesh



Vaageesan



Abhiraluxmi



Pathumithaa

5 Students Graduated in our 23rd Annual Show held on June 22, 2024 in Etobicoke.
We have produced 111 Graduates and 35 Music Composers & Arrangers in the last 23 years.
$3326 was awarded to many Students as Gifts, Scholarships & Musical Instruments etc.

23 ஆண்டுகளில், 111 மாணவர்கள் பட்டம் பெற்றிருக்கிறார்கள். 35 மாணவர்கள் இசை அமைப்பாளர்களாக அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறார்கள். 23-வது ஆண்டு விழாவில் 5 மாணவர்கள் பட்டம் பெற்றார்கள். $3326 டாலர்கள் Scholarship அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

*(17 பக்கம் தொடர்ச்சி)*

## "சங்கு" கள்வர்களும் "வீட்டு" திருடர்களும்

**கே. பாலா**

2001 ஆம் ஆண்டு நடந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு 15 ஆசனங்களையும் 2004 ஆம் ஆண்டு நடந்த பாராளுமன்றத் தேர்தலில் 22 ஆசனங்களையும் 2010 ஆம் ஆண்டு நடந்த பாராளுமன்றத் தேர்தலில் 14 ஆசனங்களையும் 2015 ஆம் ஆண்டு நடந்த பாராளுமன்றத் தேர்தலில் 16 ஆசனங்களையும் 2020 ஆம் ஆண்டு நடந்த பாராளுமன்றத் தேர்தலில் 10 ஆசனங்களையும் கைப்பற்றியது.

சுமந்திரன் 2010 தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். 2015 ஆம் ஆண்டுக்கான பாராளுமன்றத்தேர்தலில் யாழ் மாவட்டத்தில்ல் போட்டியிட்ட சுமந்திரன் 58,043 வாக்குகளை பெற்று பாராளுமன்றத்திற்கு தெரிவான நிலையில் பின்னர் அவரின் சுயரூபம் வெளிப்படத் தொடங்கியதால் 2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் யாழ் மாவட்டத்தில் 27,834 வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் சென்றார். இம்முறையும் எப்பாடுபட்டேனும், என்ன விலைகொடுத்தேனும் யாரைப் பலி கொடுத்தேனும் பாராளுமன்றம் சென்றுவிட வேண்டும் என்பதில் கொலை வெறியுடன் சுமந்திரன் பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளார்.

2001 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தமிழ் தேசியக்கூட்டமைப்புக்குள் 2010 ஆம் ஆண்டு "வெளிநாட்டு மாப்பிள்ளை" போல் வந்த சுமந்திரன் 14 ஆண்டுகள் தமிழ் தேசியக்கூட்டமைப்பில் குடும்பம் நடத்திவிட்டு தற்போது மனைவி நடத்தை கெட்டவள் .பிள்ளைகள் தறுதலைகள் என்று கூறுவது போல் "கடத்தல்காரர்களாக, கொள்ளையர்களாக, கொலையாளிகளாக இருந்தவர்கள் திருந்திவிட்டார்கள் என்று நம்பி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் சேர்த்து வைத்திருந்தோம். ஆனால், அவர்கள் திருந்தவில்லை" என்று கூறுகின்றார். அதேபோல் "மதம் மாற்றிகள், சிங்களவரின் மாமனார், சிங்களவரின் மருமகன், சிங்களவரின் சம்பந்திகள், சிங்களவர்களுடன் வர்த்தக உறவுகளை வைத்திருப்பவர்கள், சிங்கள பெண்ணின் காதலர், பேரினவாதத்தின் விசுவாசிகள் திருந்துவார்கள் என்று நம்பி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் சேர்த்து வைத்திருந்தோம். ஆனால், அவர்கள் திருந்தவில்லை" என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பங்காளிகள் சொல்வதற்கு எவ்வளவு நேரமாகும்?

ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன். புளொட் தலைவர் சித்தார்த்தன் ஆகியோரையே மறைமுகமாக "சங்குக் கள்வர்கள்" என சுமந்திரன் கூறியதால்தான் "வீட்டு திருடன்" என சுமந்திரனை சித்தார்த்தன் கூறுகின்றார். எனவே நாம் ஒருவரை குற்றம்சாட்டி ஒருவிரலை நீட்டும்போது ஏனைய 3 விரல்கள் எம்மை நோக்கியே நீண்டிருக்கும் என்பதனை முதலில் சுமந்திரன் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது "உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன் (யோவான் 8:7) என்று இயேசு கிறிஸ்து கூறியது சுமந்திரனுக்கும் நன்கு பொருந்தும்.

ஆகவே பாராளுமன்றத் தேர்தலில் ஒரே அணியில் இருந்தவர்கள் எதிரும் புதிருமாக போட்டியிடுவது தவறில்லை. உங்கள் தேர்தல் பிரசாரங்களை தமிழ் மக்களுக்கு எதனைப் பெற்றுக் கொடுப்போம் என்பதை போட்டி போட்டு கூறுங்கள். மக்களுக்கு போட்டி போட்டு நம்பிக்கையளியுங்கள், அவர்களை வாக்களிக்கத் தூண்டுங்கள். உங்கள் எதிரணியினரை விட நீங்கள் மக்களின் அவலங்களை, தேவைகளை, பிரச்சினைகளை அதிகம் தெரிந்து கொண்டவராக காட்டுங்கள் அதன் மூலம் வெற்றிபெறுங்கள், அதனை விடுத்து இழிவான, அருவருப்பான, 3ஆம்தர பிரசாரங்களை மேற்கொண்டு தமிழர் தேசிய அரசியலை தரம் தாழ்த்தி மற்றைய இனங்கள் முன்பாக தமிழ் மக்களை கூனிக்குறுகி நிற்க வைத்து விடாதீர்கள்.

## ஆங்கில ஆசான் (நிலை மண்டில ஆசிரியப்பா)

நாகேந் திரனென்ற நல்லதோர் ஆசான்
வாகாக வந்த தெமக்கு வரமே!
ஆங்கிலக் கல்வியை அழகாய்க் கற்கவே!
பாங்காய்ப் பாடப் பதிப்புத் தந்தே!
தாங்காக் குளிரிலும் தயங்கி நிற்காது
ஓங்கார மந்திர மாக ஓதுவார்
புத்தரைப் போலவே புனிதராய் வந்தே!
புத்து ணர்வுடன் புதன்கிழ மைகளில்
முத்தாய்ப் பாடம் நடாத்தும் முதல்வனை
சொத்தாய் எண்ணி தொழுது நிற்போம்
கனடாக் கதையும் கண்டத் தோற்றமும்
மனதில் வைத்தே மறந்திடாச் சொல்வார்
இலக்கண விதிகளை இதமாய்ச் சொல்லியே!
கலங்கிடா நாங்கள் கற்றிடச் செய்வார்
அன்னார் ஞாபக அறிவைக் கண்டு
என்னுள் எண்ணி ஏக்கம் கொள்வேன்
கதையுடன் கல்வியைக் கருத்துடன் இயம்பியே
சிதைவிலா அவற்றைச் சிந்தையில் ஏற்றுவார்
மூத்தோர் எமக்கு மூச்சாய் வழங்கும்
ஆத்மாவை ஆயுள் உளவரை மறக்கோம்
தன்னார்வத் தொண்டாய்த் தன்பணி செய்யும்
அன்னவர் ஆற்றலைப் போற்றி வாழ்த்துமே!

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
(416) 844-7453


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

# மாவிலி மைந்தனின் மரபு இலக்கியங்கள்



- முனைவர் மு. இளங்கோவன்
புதுச்சேரி, இந்தியா

[மாவிலி மைந்தன் என்னும் புனைபெயரில் எழுதும் சண்முகராசன் சின்னத்தம்பி யாழ்ப்பாணத்தை அடுத்த நெடுந்தீவில் பிறந்தவர். தற்பொழுது கனடாவில் வாழ்ந்து வருகின்றார். கனடா தொல்காப்பிய மன்றத்தின் செயலாளராக உள்ளவர். செவிலியர் பயிற்சி பெற்று, இலங்கை, ஓமன், கனடாவில் பணியாற்றியவர். மரபுக் கவிதையில் ஈடுபாடு கொண்டவர். வைகறை வானம், மனவெளி மேகங்கள், முனையிலே முகத்து நில் உள்ளிட்ட நூல்களின் ஆசிரியர். தமிழில் முதுகலைப் பட்டம் பெற்றதுடன் தன்னார்வலராக இருந்து பலருக்கும் யாப்பு இலக்கணங்களைப் பயிற்றுவித்து வருகின்றார்.]

அண்மையில் கனடாவில் நடைபெற்ற உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாட்டின் ஓர் அங்கமாகத் தொல்காப்பியம் குறித்த கவியரங்கம் நடைபெற்றது. கவியரங்கம் என்றால் பலருக்கும் ஒவ்வாமை இருக்கும். ஒரே வரியைப் பாவலர்கள் மீண்டும் மீண்டும் படித்து, பார்வையாளர்களை எரிச்சலடையச் செய்துவிடுவார்கள். அவ்வாறுதான் இந்தக் கவியரங்கமும் இருக்கும் எனப் பார்வையாளர் வரிசையில் இருந்த நானும் கருதிக்கொண்டிருந்தேன். ஆனால் நடந்ததோ வேறு வகையில் இருந்தது.

பாவலர் சண்முகராசன் சின்னத்தம்பி தலைமையில் அன்பின் ஐந்திணை என்னும் தலைப்பில் ஐந்து பாவலர்கள் கவிதை படைத்தனர். பாவரங்கத் தலைவர் சண்முகராசன் அவர்கள் தம் தலைமைக் கவிதையை வழங்கியதுடன் பாலை என்னும் திணையைக் குறித்தும் கவிதை படைத்தார். அவரின் சொல்லாட்சியும் எடுத்துரைப்பும் மரபு வடிவத்தை ஆளும் புலமையும் நேரில் கண்டு வியப்புற்றேன். மேடையிலிருந்து இறங்கி வந்ததும் அவரைப் பற்றித் தெரிந்துகொள்ளும் வேட்கை மிகுந்தது. ஆர்வமுடன் அவர் பணிகளையும் தமிழ்ப் பங்களிப்பையும் அறிந்து வியப்புற்றேன். செவிலியர் பயிற்சிக் கல்லூரியில் பட்டயப் படிப்பினைப் பயின்றவுடன் பணியில் இணைந்த சண்முகராசன் பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றிய பட்டறிவு உடையவர். அவர்தம் வாழ்வியலையும் தமிழ் இலக்கியப் பங்களிப்பையும் இக்கட்டுரையில் வரைகின்றேன்.

சண்முகராசன் சின்னத்தம்பியின் இளமைப் பருவம்

மாவிலி மைந்தன் என்னும் புனைபெயரில் படைப்புகளை நல்கும் சண்முகராசன் யாழ்ப்பாணம் மாவட்டம் நெடுந்தீவைச் சேர்ந்தவர். 03.05.1947 இல் பிறந்தவர். இவர்தம் பெற்றோர் பெயர் சின்னத்தம்பி, நாகமுத்து அம்மையார் ஆவர். தம் ஏழாம் அகவையில் தந்தையை இழந்த சண்முகராசன் தாயின் அரவணைப்பில் வளர்ந்தவர். பள்ளிக் கல்வியை நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் பயின்றவர் (1964). உயர்தரக் கல்வியை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் பயின்றவர் (1966). செவிலியர் பயிற்சியில் இணைந்து 1967 முதல் 1970 வரை பயின்று, பட்டயச் சான்று பெற்றவர். பின்னர் அத்துறையில் இளங்கலைப் பட்டமும் பெற்றவர். கொழும்பில் அமைந்துள்ள கல்லூரியில் பட்ட மேற்படிப்புக் கல்வியை நிறைவுசெய்தவர் (1974-77). பேராதனையில் அமைந்துள்ள இலங்கைப் பல்கலைக்கழகத்தில் மருத்துவக் கல்வியியல் பிரிவிலும் பயின்று பட்டம்பெற்றுள்ளவர். டொரான்டோவில் அமைந்துள்ள சோர்ச்சு பிரவுன் கல்லூரியில் 20021 ஆம் ஆண்டில் அவசர நோயாளர் பராமரிப்பில் சிறப்புப் பயிற்சி பெற்றவர்.

சண்முகராசன் சின்னத்தம்பியின் மருத்துவத்துறைப் பணிகள்

கொழும்பு மருத்துவமனையில் அவசரப் பிரிவில் செவிலியர் அதிகாரியாக முதன்முதல் பணியேற்றவர் (1970-74). யாழ்ப்பாணம் செவிலியர் பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாளராக 1977-83 வரை பணியாற்றியவர். மட்டக்களப்பு செவிலியர் பயிற்சிக்கல்லூரியில் துணை முதல்வராகப் பணியாற்றியவர் (1979-81). 1983 முதல் 1999 வரை ஓமன் நாட்டின் மஸ்கட் செவிலியர் கல்லூரியில் மூத்த விரிவுரையாளராகவும், பாடத்திட்ட ஆக்கக்குழுவின் ஒருங்கிணைப்பாளராகவும் பணியாற்றியவர். 1999 ஆம் ஆண்டில் கனடாவுக்குப் புலம்பெயர்ந்த பிறகு டொராண்டோ கிழக்குப் பொது மருத்துவமனையின் அவசரப் பிரிவில் மேலாளராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர். கனடா ஜேஆர்எஸ் கல்லூரியில் மருத்துவத்துறைப் பகுதிநேர விரிவுரையாளரகப் பணியாற்றுகிறார்.

தம் தமிழ் ஆர்வத்தின் காரணமாக டொராண்டோ அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் கனடா வளாகத்தில் ஈராண்டுகள் பயின்று, தமிழில் முதுகலைப் பட்டம் பெற்றவர் (2018). இங்குப் பயின்ற காரணத்தால் தமிழ் இலக்கண இலக்கியங்களில் நல்ல பயிற்சியும், புலமையும் ஏற்பட்டதால் மரபுக் கவிதைகள் எழுதுவதில் இவருக்குப் பெரிய விருப்பம் உண்டானது.

சண்முகராசன் சின்னத்தம்பி அவர்கள் முறையாகத் தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பயின்ற காரணத்தால் இவர் கவியரங்குகள் பலவற்றைத் தலைமையேற்று நடத்தும் தகுதிப்பாடும் அடைந்தார். இணையம் வழியாகவும், மேடை நிகழ்வாகவும் பல கவியரங்கங்கள் இவ்வாறு நடந்துள்ளன. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் கனடா வளாகத்தில் தன்னார்வலராகத் தமிழ் விரிவுரையாளர் பணியும் ஆற்றியவர். கனடாத் தமிழ்க் கவிஞர் மன்றதின் தலைவராகவும் செயல்பட்டவர்.

சண்முகராசன் அவர்கள் கமலாதேவி அவர்களை 21.11.1973 இல் திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்கு யாழினி, மைதிலி, நவநீதன், சாலினி ஆகிய மக்கள் செல்வங்கள் வாய்த்தனர்.

சண்முகராசன் அவர்கள் பெற்றுள்ள விருதுகள்

சண்முகராசன் சின்னத்தம்பியின் தமிழ் இலக்கிய மற்றும் சமூகப் பணிகளைக் கண்டு அரசும், தமிழமைப்புகளும் பல்வேறு விருதுகளை வழங்கிப் பாராட்டியுள்ளன. அவற்றுள் கீழ்வரும் விருதுகள் குறிப்பிடத்தக்கன.

1. தன்னார்வத் தொண்டுப்பணி விருது, ஒன்ராரியோ மாகாண அரசு, 2014
2. சிறந்த தமிழ்ப் பணிக்கான விருது, நினைவுகள் இணையத் தளம் 2020
3. சிறந்த மரபுக் கவிதை நூலுக்கான முதற்பரிசு (மனவெளி மேகங்கள்), தமிழ்நாடு திருவள்ளுவர் இலக்கியமன்றம், நல்லழகம்மை செல்லப்பன் அறக்கட்டளை 2021
4. பாடலாசிரியர் விருது, தமிழாழி ஊடகம், மென்றியல் 2021
5. பாவலர் விருது, கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம், 2022
6. தமிழ்க் கலைச் சொல்லாக்கப் பங்களிப்புக்கான பாராட்டு அங்கீகாரம், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம், தமிழ் நாடு அரசு
7. தமிழ் இலக்கியப் பணிக்காகத் தங்கப் பதக்கமும் விருதும் - தமிழர் தகவல் மாத இதழ், கனடா (2022)
8. கவி ஆசான் விருது - கனடாத் தொல்காப்பிய மன்றம் (2022)

சண்முகராசனின் தன்னார்வத் தொண்டுகள்

சண்முகராசன் அவர்கள் தம் பணிநேரம் போகத் தம் மனத்துக்கு இனிய பொதுப்பணிகளில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டு உழைத்தவர். அவ்வாறு இவரின் பணிகள் பல அமைப்புகளின் செயல்பாடுகளுக்கும் வளர்ச்சிக்கும் துணைசெய்துள்ளன. அத்தகைய அமைப்புகளின் விவரம்:

1. முன்னாள் அமைப்பாளர், சௌக்கியதான இயக்கம் (மருத்துவ உதவித் தன்னார்வ அமைப்பு), யாழ். கிளை - 1978 - 1985
2. முன்னாள் தலைவர், நெடுந்தீவுப் பாடசாலைகள் பழைய மாணவர் சங்கம், கனடா - 2004
3. முன்னாள் பொருளாளர், கனடாத் தமிழர் எழுத்தாளர் இணையம் - 2006
4. முன்னாள் பொருளாளர், நெடுந்தீவு மக்கள் ஒன்றியம், கனடா - 2008
5. முன்னாள் தலைவர், கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் - 2011 - 2015
6. செயலாளர், தொல்காப்பிய மன்றம், கனடா 2022 - 2024
7. தமிழ் மரபுரிமைத் திங்கள் செயற்பாட்டுக் குழு உறப்பினர்
8. ஆசிரியர், கவிதை, யாப்பிலக்கணப் பயிலரங்கம் (சனிக்கிழமை தோறும் கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் நடத்தும் இலவச வகுப்பு)
9. பங்களிப்பு, தமிழ்க் கலைச் சொல்லாக்கம், செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம், தமிழ் நாடு அரசு.
10. பாடலாசிரியர்
11. கவிதையால் இணைவோம், மாவிலி மைந்தனின் கவிதை முற்றம் - அமைப்பாளர், (திங்கள் தோறும் இரண்டாவது ஞாயிற்றுக் கிழமை - ஸூம் செயலி வழியாகக் 3மணிநேரக் கவியரங்க நிகழ்ச்சி)

மாவிலி மைந்தனின் தமிழ்க்கொடை

சண்முகராசன் சின்னத்தம்பி அவர்கள் மாவிலி மைந்தன் என்னும் பெயரில் தமிழில் மரபுக் கவிதைகள், கட்டுரைகள் பலவற்றை எழுதியுள்ளார். இவர் எழுதிய கவிதைகள் தொகுக்கப்பட்டு வைகறை வானம் (2012), மனவெளி மேகங்கள் (2019), முனையிலே முகத்து நில் (2022) என்னும் நூல்களாக வெளிவந்துள்ளன. இந்த நூல்களில் இடம்பெற்றுள்ள கவிதைகள் யாவும் யாப்பிலக்கணத்தில் வரையப்பட்ட கவிதைகளாகும். புலம் பெயர்ந்த மண்ணில் இவர்போல் இலக்கிய ஈடுபாட்டுடன், யாப்பிலக்கணம் பயின்று கவிதை வரைவோர் குறைவு என்றே குறிப்பிடலாம்.

வைகறை வானம்

கவிஞரின் முதல் கவிதை நூல் இதுவாகும். பல்வேறு சூழல்களில் எழுதப்பட்ட கவிதைகள் தொகுக்கப்பட்டு வைகறை வானம் என்ற தலைப்பில் நூலாகியுள்ளது. இந்நூல் வெளிவருவதற்கு முன்னர் முழக்கம், உலகத் தமிழர், உதயன், தமிழர் செந்தாமரை, முரசொலி போன்ற இதழ்களில் பல கவிதைகளை இவர் வெளியிட்டுள்ளார்.

வைகறை வானம் நூலில் பகுதி 1. மரபுக் கவிதைகள் எனவும், பகுதி 2, கவியரங்கக் கவிதைகள் எனவும், பகுதி 3. விடுதலைக் காற்றில் விரிந்த மொட்டுகள் எனவும் கவிதைகள் பகுத்து வெளியிடப்பட்டுள்ளன.

மாவிலி மைந்தனின் நூலில் அழகிய சொல்லாட்சிகளும், சிதைவுறாத யாப்பு அமைப்புகளும், அழகிய கற்பனைகளும் உவமைகளும் இடம்பெற்றுள்ளன. இவை படிப்பவர்களுக்கு ஆர்வமூட்டுபவை ஆகும். இவரின் கவிதைகள் கற்பவரின் உள்ளத்தைக் கவர்ந்திழுக்கும் ஆற்றல்பெற்றவையாகும். தம் தாய் மண்ணான இலங்கையின் நெடுந்தீவு குறித்த மாவிலி மைந்தனின் பாடல்கள் அவரின் ஊர்ப்பற்றை உரக்கச் சொல்லும் கவிதை என்பேன்.

தெங்குபனை தென்றலிலே தோகையசைத் தாடும்
தோட்டத்து மரக்கிளையில் தேன்குயில்கள் பாடும்
தங்கத்தைக் குழைத்துமுகம் தடவியகீழ் வானம்
தனைவிட்டுக் கதிர்விலகத் தனிமையிலே வாடும்
பொங்குகடல் மீதினிலே மீனவரின் ஓடம்
பொன்மாலைப் போதினிலே பேரணியாய்ப் போகும்
அங்கமெலாம் அணிகலனாய் ஒளிரும்நற் கோலம்
அழகுறவே அமைந்ததெங்கள் அன்னைநெடுந் தீவே! (பக்கம் 59)

என்னும் பாடலில் செழுமையான யாப்பமைப்பும் கற்பனை நயமும் காட்சிப்படுத்திக் காட்டும் திறமையும் வெளிப்படுகின்றன. இவை பாவேந்தர் பாரதிதாசனாரின் அழகின் சிரிப்பை நமக்கு நினைவூட்டும்.

(தொடர்ச்சி 23 பக்கம்)

இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் நிமோனியா காய்ச்சல் காரணமாக இளம் குடும்பப் பெண் உயிரிழப்பு!

யாழ்ப்பாணத்தில் நிமோனியா காய்ச்சலால் பாதிக்கப்பட்ட இளம் குடும்பப் பெண்ணொருவர் 17-10-2024 அன்றையதினம் உயிரிழந்துள்ளார். கோப்பாய் தெற்கு, வீரபத்திரர் கோயில் வீதியைச் சேர்ந்த காந்தீபன் சுதர்ஷினி (வயது 44) என்று குடும்பப் பெண்ணை இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில், குறித்த பெண் கணவனை பிரிந்து வாழ்ந்து வருவதுடன், யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியிலும் ஊழியராக கடமை புரிந்து வருகின்றார். இந்நிலையில் தனக்கு காய்ச்சல் என தெரிவித்த பெண் கடந்த 11ஆம் திகதி வீடு திரும்பியுள்ளார்.

இது இவ்வாறு இருக்கையில் அவர் மரணித்த அன்றையதினம் அவரது வீட்டில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலம் மீது மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனைகளின் போது நிமோனியா தொற்று ஏற்பட்டதன் காரணமாக அவர் இறந்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார் உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# மதுபானசாலை விவகாரத்தில் தொடர்ந்தும் ஆதாரபூர்வமற்ற தகவல்கள் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - அங்கஜன் சீற்றம்!



கடந்த ஆட்சிக் காலத்தில் நாம் புதிய மதுபான சாலைக்கான அனுமதியை அரசிடமிருந்து பெற்றுக் கொண்டதாக பல்வேறு தரப்புகளாலும் முன்வைக்கப்படுகிற ஆதாரப்பூர்வமற்ற தகவல்களுக்கு சட்ட நடவடிக்கை எடுக்க தயாராகி வருகிறோம் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

இன்றையதினம் அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார், அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தற்போது நாட்டில் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டு அதன் அடுத்த படியாக பாராளுமன்ற தேர்தலை நோக்கி நாடு நகர்ந்து செல்கிறது. இந்நிலையில் என் மீதும் எனது தந்தையார் மீதும் பழி சுமத்தும் நோக்கில் சிலர் எந்த விதமான ஆதாரமும் அற்ற வீண் குற்றச்சாட்டுகளை தமது சுயலாப அரசியல் தேவைகளுக்காக முன் வைத்து வருகின்றனர்.

இந்த ஆதாரப்பூர்வமற்ற குற்றச்சாட்டுகளை முன் வைப்பது யார் என பார்த்தால் கடந்த காலத்தில் எம்மோடு நேரடியாக போட்டி போட்டு வெல்ல முடியாதவர்களே இவ்வாறான பொய் குற்றச்சாட்டுகளை பரப்பி வருகின்றனர். ஒரு சில அரசியல்வாதிகளும், எமது சமூக சேவைக்கு ஈடுகொடுக்க முடியாதவர்களுமே இவ்வாறு பொய்யாக வாய்க்கு வந்தபடி பேசி வருகின்றனர்.

இவ்வாறானவர்களின் அர்த்தமற்ற பேச்சுகளுக்கு பதில் கூற வேண்டிய தேவை எமக்கில்லை. ஆனாலும் நம் மக்களை தெளிவுபடுத்த வேண்டிய தேவை நமக்கு உண்டு. அதனால்தான் சத்திய கடதாசி ஊடாக நாம் எமது ஆதாரங்களை முன்வைத்து, புதிதாக எந்த ஒரு மதுபான சாலை அனுமதியையும் அரசிடமிருந்து பெற்றுக் கொள்ளவில்லை என்பதை மக்களுக்கு நிரூபித்துள்ளோம்.

எனது தந்தையார் ஒரு தொழிலதிபர். அவருக்கு நான் ஆறு வயதில் இருக்கும்போதே மதுபானசாலை அனுமதி பத்திரம் இருந்தது. எனக்கு 17 வயதாகும் போது எனது தந்தையாருக்கு நான்கு மதுபான சாலைகளுக்கான அனுமதி பத்திரம் இருந்தன. யுத்தகாலத்தில் அவை இயங்காத நிலையில் புதுப்பிக்கப்படாமல் இருந்தன. நீண்டகாலமாக இயங்காத மதுபான சாலைகளுக்கான அனுமதி பத்திரங்களை புதுப்பித்தல் செய்வதற்கு, அப்போதைய அரச கொள்கைகளுக்கமைய சட்ட ஏற்பாடுகள் இல்லாத நிலை காணப்பட்டது.

இந்நிலையில் 2021ம் ஆண்டு மதுபான சாலைகளுக்கான புதிய அனுமதிகள், மற்றும் பழைய அனுமதி பத்திரங்களை புதுப்பித்தல் தொடர்பான அரச கொள்கை மாற்றங்களைத் தொடர்ந்து, எனது தந்தையாரால் கடந்த 2021 ஆம் ஆண்டு ஏற்கனவே இருந்த மதுபான சாலைகள் இரண்டினை புதுப்பிக்க மேல்முறையீடு செய்யப்பட்டு அதில் ஒரு அனுமதி பத்திரம் புதுப்பிக்கப்பட்டுள்ளது மற்றையது பரிசீலனையில் உள்ளது.

இவற்றை பெறுவதற்கு எனது சிபார்சினை எனது தந்தையார் எந்த ஒரு மதுபான சாலை அனுமதிக்காகவும் கோரவில்லை. அவை அரசு சுற்றுநிருபத்துக்கமைய தகுதி உள்ளது என்று தீர்மானிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

எனவே எம்மிடம் இவ்வாறான அனைத்து ஆதாரங்களும் உள்ள போதிலும் சிலர் தமது சுயலாபத்திற்காக வாய்க்கு வந்தபடி உளறி வருகின்றனர். இவ்வாறானவர்களின் சுயலாப அரசியல் நோக்கத்திற்கான இத்தகைய பொய் குற்றச்சாட்டுகள் எதிர்காலத்திலும் திட்டமிட்டு பரப்பப்படுமானால், பரப்பும் நபர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அத்தோடு இவ்வாறு பொய் குற்றச்சாட்டை முன்வைக்கும் நபர்கள் அதனை ஆதாரத்தோடு முன் வைத்தால் அரசியலில் இருந்து அந்தத் தருணமே விலகுவேன் என்பதை உறுதியாக கூறிக்கொள்கிறேன்.

ஒரு சிலர் தாங்கள் வாய் வீரர்கள் என்பதனை தொடர்ந்து நிரூபித்து வருகின்றனர். அவர்களால் ஒருபோதும் செயல் வீரர்களை வீழ்த்த முடியாது என குறிப்பிடப்பட்டுள்ளது.






MANIPAY HINDU COLLEGE - MANIPAY LADIES COLLEGE

OLD STUDENTS ASSOCIATION - CANADA (ESTD 1991)

மானிப்பாய் இந்துக் கல்லூரி - மானிப்பாய் மகளிர் கல்லூரி

பழைய மாணவர் சங்கம் - கனடா (ஸ்தாபிதம் 1991)

**மானிப்பாய் இந்துக்கல்லூரி மானிப்பாய் மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா.**

**ஆண்டுப்பொதுக்கூட்டம் 2024**

எமது சங்கத்தின் ஆண்டுப்பொதுக்கூட்டம் இம்மாதம் **OCTOBER 27,** ஞாயிறுக்கிழமை காலை 11:00 மணி முதல் மதியம் 2:00 மணி வரை இலக்கம் 3840 Finch **Ave E, Scarborough, ON M1T 3T4** ல் அமைந்துள்ள **METROPOLITAN CENTRE** ல் நடைபெறவுள்ளது என்பதனை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

மானிப்பாய் இந்துக்கல்லூரி மானிப்பாய் மகளிர் கல்லூரி பழைய மாணவர்கள் மாணவிகள் அவர்தம் குடும்ப அங்கத்தவர்கள் அனைவரையும் இப்பொதுக்கூட்டத்தில் பங்குபற்றி அவர்களது அங்கத்துவத்தை புதுப்பிப்பதோடு இவ்வாண்டிற்கான புதிய நிர்வாக சபை அங்கத்தவர்களை தெரிவு செய்ய உதவுமாறும் மற்றும் சங்கம் சிறப்பான முறையில் நடைபெற ஆலோசனைகளையும் கருத்துக்களையும் வழங்குமாறும் எமது சங்கம் உங்களை அன்பாக அழைக்கின்றது.

தொடர்புகட்கு :

| தலைவர் | செயலாளர் | |
|---|---|---|
| க. கமல்ராஜ் | செ. பார்த்திபன் | சி. கனேசலிங்கம் |
| 416-821-7870 | 647-710-9404 | 416-499-6248 |

கனடிய செய்திகள் Canadian News

# தனது வெற்றிகரமான 20வது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் "கிழக்கிலங்கை குழந்தைகள் மேம்பாட்டுச் சங்கம்"

கனடாவை தளமாகக் கொண்டு இயங்கும் "கிழக்கிலங்கை குழந்தைகள் மேம்பாட்டுச் சங்கம் - Children Development Association of Eastern Sri Lanka" (சீடாஸ் - கனடா) எனும் அமைப்பு இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் பரவலாக சுமார் இரண்டு தசாப்தங்களாக சமூகப்பணிகளை செய்து வருகிறது.

சீடாஸ் அமைப்பின் 19 ஆவது வருட பூர்த்தி நிகழ்வு கடந்த 12.10.2024 அன்று கனடாவில் மிகவும் சிறப்பாக இடம் பெற்றது.

இதன் தலைவரான கல்முனையைச் சேர்ந்த நோ.விஜயரெட்ணம் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில், கலை நிகழ்ச்சிகள், பேச்சுக்கள், போட்டிகள், பரிசளிப்புக்கள், சேவைக்கான கௌரவிப்புக்கள் என மிகவும் நேர்த்தியான திட்டமிடலுடன் இடம் பெற்றது. இவ்வருட நிகழ்வில் தொடர்ச்சியாக சங்கத்திற்கு ஆதரவு வழங்கி வரும் மூன்று அங்கத்தவர்களுக்கு விருதுகள் வழங்கப்பெற்றன.

விசு கணபதிப்பிள்ளை அவர்களுக்கு சமூக சேவைக்கான விருதும், நிதி உதவி விருதுகள், திருமதி. சோதிமலர் முத்துலிங்கம், வைத்தியர் திருமதி. அன்னபூரணி ஆகியோருக்கும் வழங்கப்பட்டன இந் நிகழ்வுக்கு செயலாளராக சசீந்திரன் வீரசிங்கம், பொருளாளராக, ஜீவா மாணிக்கம் ஆகியோரின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கதாகும். இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக சட்ட ஆலோசகர் நமோ பொன்னம்பலம் கலந்து சிறப்பித்தார். மற்றும் சீடாஸ் அமைப்பின் உறுப்பினர்கள் குடும்ப சகிதம் கலந்து சிறப்பித்திருந்தனர்.











சீடாஸ் அமைப்பு 2004 ஆம் ஆண்டு சுனாமி பேரவலம் நாட்டில் இடம் பெற்ற போது அதன் பாதிப்புக்குள்ளான சிறுவர்களது சுகாதார ஆரோக்கியம், கல்வி வளர்ச்சியை முக்கிய பணியாகக் கொண்டு மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தனது அவசர பணியை ஆரம்பித்திருந்தது. தொடர்ச்சியாக போர்க்கால சூழலினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள சிறுவர்களையும் கவனத்தில் எடுத்து சேவையை தொடர்ந்து செய்து வருகின்றனர்.

இவர்களின் சமூகப்பணிகள் மாணவர்களின் நலன் கருதியதாக, வறுமை நிலையில் உள்ள குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் செய்திருந்தாலும், மாணவர்களின் கல்வியை விருத்தி செய்தலை பிரதான நோக்காகக் கொண்டு, நேரடியான கல்வி முன்னேற்ற செயற்பாடுகளை பரவலாக செய்து வருகின்றனர்.

பொத்துவில், வாகரை, பொலனறுவை ஆகிய பிரதேசங்களிலும் பல் வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருந்தனர். பாடசாலைக்கு செல்லும் மாணவர்களுக்கு தேவை அறிந்து துவிச்சக்கர வண்டிகளை வழங்கியுள்ளனர்.

இலுப்படிச்சேனை, மண்டூர் பிரதேசத்தில் தரம் 10 தொடக்கம் உயர்தரம் வரையான மாணவர்களுக்கான இலவசக் கல்வியையும், மாணவர் கல்வி முன்னேற்ற செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றனர் இதன் மூலம் சிறந்த பெறுபேறுகளையும் அடைந்துள்ளனர்.

வீரமுனை, ராணமடு, திருக்கோவில் பிரதேசங்களில் இந்த கல்வி முன்னேற்ற திட்டத்தை நடைமுறைப்படுத்த ஏற்பாடுகள் இடம் பெற்று வருவதாகவும் சீடாஸ் அமைப்பின் தலைவர் நோ.விஜயரெட்ணம் கல்முனை நெற்றுக்கு தெரிவித்தார்.

*(21 பக்கம் தொடர்ச்சி)*

# மாவிலி மைந்தனின் மரபு இலக்கியங்கள்

மருத்துவத்துறையில் மாமணியாக விளங்கிய மாவிலி மைந்தன் நலவெண்பா என்னும் தலைப்பிட்டு வரைந்துள்ள பாடல்கள் உடலோம்பலின் முதன்மையை நமக்கு எடுத்துரைக்கின்றன.

நன்றாக வேயுண்டு நாளும் உடல்வளர்த்தால்
கொன்றே ஒழிக்கும் கொடுநோய்கள் - இன்றேநீ
செய்வாய் உடற்பயிற்சி சீராக அ∴தொன்றே
உய்யும் வழியாம் உணர்

எனவும்,

சர்க்கரை நோய்தன்னைச் சரிசெய்யா விட்டுவிட்டால்
சிக்கலால் நல்வாழ்வு சீரழியும் - எக்குறையும்
வாராது சக்கரையை வைத்தாலே கட்டுக்குள்
தீராது போமோ துயர்

எனவும் உடல்நலம் போற்றும் வெண்பாக்களை வரைந்து, மக்களுக்கு நலவாழ்வு வாழ வழிகாட்டியுள்ளார்.

ஈழ விடுதலைக்கு இன்னுயிர் ஈந்தவர்களின் ஈகத்தினைப் போற்றிப் பாடித் தம் நாட்டுப்பற்றையும் நம் பாவலர் மாவிலி மைந்தன் வெளிப்படுத்தியுள்ளார்.

மனவெளி மேகங்கள்

மனவெளி மேகங்கள் என்னும் நூல் பகுதி 1. பல்சுவைக் கவிதைகள் எனவும் பகுதி 2. வெண்பாச் சரம் எனவும் பகுதி 3. கவியரங்கக் கவிதைகள் எனவும் பகுதி 4. பாமாலை எனவும் தலைப்புகளைக் கொண்டுள்ளது. 78 கவிதைகளால் இந்த நூல் அமைந்துள்ளது. பல்வேறு யாப்பு வடிவங்களிலும் இசைப் பாடல்களுமாக இந்த நூல் உள்ளது.

அகிலத்தில் அறமோங்க வேண்டும் என்று முருகனை வாழ்த்திப் பாடும் பாடலுடன் இந்த நூல் தொடங்குகின்றது.

நயாகரா அருவியின் அழகினை,

மெல்ல நடந்தவுன் பாதையிற் - காணும்
மேட்டை யமைத்தவர் யாரடி? - நீயும்
செல்லும் வழிபள்ள மாக்கியே - சிறை
தள்ள நினைத்தவர் யாரடி? - அந்தப்
புல்லிய ரைப்பொடி யாக்கவோ - சினம்
பொங்கிப் புலியெனப் பாய்கிறாய்! - வெறும்
கல்லும் மலையும் தடுக்குமோ - உந்தன்
கட்டற்ற வேகத்தைத் தாண்டுமோ! (பக்கம் 47)

என்று பாடியுள்ளமை இவரின் கற்பனை ஆற்றலுக்குச் சான்றாக உள்ளது.

முனையிலே முகத்து நில்

மாவிலி மைந்தனின் முனையிலே முகத்து நில் என்னும் கவிதை நூல் பாரதியாரின் புதிய ஆத்திசூடியின் 110 பாடலடிகளையும் தலைப்பாக அமைத்து 110 கவிதைகளால் அமைந்த நூலாகும். பாரதியாரின் கவிதைகளில் மாவிலிமைந்தனுக்கு உள்ள ஈடுபாடும் சமூக அக்கறையும் இந்த நூலில் காணமுடிகின்றது.

அச்சம் தவிர் என்னும் பாரதியாரின் ஆத்திசூடியை உள்ளத்துள் கொண்டு மூன்று எண்சீர் விருத்தங்களை மாவிலி மைந்தன் படைத்துள்ளார்.

உள்ளத்துள் அச்சமெனும் வேரூன்றி விட்டால்
உலகமெலாம் இருண்டதுபோல் உருமாறிப் போகும்
மெல்லமெல்ல அதுவளர்ந்து முழுவிருட்ச மாகி
முழுதாக மூடியுந்தன் மூச்சினையும் நிறுத்தும்!
பள்ளத்தில் தள்ளிவிட்டுப் பலர்பார்க்கச் சிரிக்கும்
பரிதாப நிலைதந்து பக்கத்தில் இருக்கும்
தெள்ளியதாய் இவையனைத்தும் நேர்கொண்டே இன்றே
தீர்க்கமுடன் அச்சமதைத் தவிர்த்திடுதல் நன்றே! (பக்கம், 11)

என்று அச்சந்தவிர் என்ற ஒற்றை வரியை உள்ளத்துள் கொண்டு பாட்டால் உரைவரையும் மாவிலி மைந்தனின் பாப்புனையும் ஆற்றல் போற்றத்தக்கது.

பாரதியார் தீமைக்கு எதிராகக் குரல் கொடுத்த தீரர். சிறுமை கண்டு பொங்கியவர். சீறுவோரைக் கண்டால் சீறு என்று புதிய வழிசொன்னவர். சீறுவோர்ச் சீறு என்பது பாரதியம். இதற்கு விளக்கப்பா வரையும் மாவிலிமைந்தன்,

ஓங்கிய அதிகாரம் - தலை
உச்சியில் ஏறிடும் இறுமாப்பு
தாங்கிய கயவர்களின் - சீற்றம்
தன்னையே கண்டுநாம் விழிமூடித்
தூங்கியே வாழுவதோ? - சீறித்
துடித்தெழுந் தெதிர்த்துமே போராடினால்
நீங்கிடும் கொடுமையெல்லாம் - நீண்டு
நிலைத்திடும் நீதியிந் நிலத்தினிலே! (பக்கம் 38)

என்று பாடியுள்ளமை இவரின் உள்ளம் காட்டும் உயரிய வரிகளாகும். இந்த நூலில் அமைந்துள்ள பாடல்கள் அறுசீர், எழுசீர், எண்சீர் பன்னிருசீர் விருத்தங்கள், கலிவெண்பா, நேரிசை வெண்பா, கலித்துறை, குறள்வெண்பா, ஈரடி வியனிலைச் சிந்து, நேரிசை ஆசிரியப்பா, கலிவிருத்தம், இயற்கும்மி, வெண்கலிப்பா, நொண்டிச்சிந்து, தரவுக்கொச்சகக் கலிப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, கிளிக்கண்ணிகள், குறள்வெண்செந்துறை முதலான யாப்பு வடிவங்களில் வெளிவந்துள்ள பாடல்கள் மாவிலி மைந்தனின் யாப்புப் புலமையைப் பறைசாற்றிக் கொண்டிருக்கும்.


Nathaswara Thavil Music Of Global Inc.
நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு
27th ANNIVERSARY
இடம் :
TAMIL ISAI KALAMANDRAM
1120, Tapscott Rd, Unit, #3,
Scarborouch ON, M1Y 1E8
காலம் : Oct-19-2024 சனிக்கிழமை
நேரம் : மாலை, 4.30 மணிக்கு ஆரம்பம்
அனுமதி இலவசம்
நாட்டிய வேதா இந்திய கிளாசிக்கல் டான்ஸ் ஸ்ரீமதி ஜெயா பத்மினி ஆனந் அவர்களின் மாணவிகள் வழங்கும் பரதநாட்டியம்.
சக்தி சங்கீத அகடமி ஸ்தாபகர் சங்கீத வித்தகி திருமதி பராசக்தி விநாயகதேவராஜா அவர்களின் மாணவ மாணவிகள் வழங்கும் இன்னிசை
ஏழிசை மதுரசபா ஸ்தாபகர் வீணை வித்துசி திருமதி கல்யாணி சுதர்சன் அவர்களின் மாணவிகள் வழங்கும் வீணை இசை.
தவில் வித்துவான் கலைமாமணி திருப்புன்கூர் திரு. T.G முத்துக்குமாரசாமி அவர்கள்
நாதஸ்வர வித்துவான் அளவையூர் கலாநிதி R. கேதீஸ்வரன் அவர்கள்
திரு. R. குருமூர்த்தி
திரு. V.M.V. மணிகண்டன்
திரு. S. ரவீந்திரன்
திரு.K.R. முத்துக்குமாரசாமி
திரு. V.M. செல்வராஜ்
திரு. R. வெங்கடேஸ்
திரு P. மெய்யப்பமுரளி
திரு S. முருகானந்தம்
திரு. S. பூரணச்சந்திரன்
திரு A. நந்தீஸ்குமார்
திரு. V. ராஜா
திரு. G.பிரேம்குமார்
திரு V. சரவணன்
திரு V. மாணிக்கவாசகம்
திரு. S.P. பழனிவேல்
திரு D. இராஜகோபால்
திரு R. மாரிசாமி
திரு T.M. மணிகண்டன்
திரு D. பிரசாத்
திரு T.N.V மதன்ராஜ்
திரு K.G.K. கார்த்திகேயன்
திரு. M. முருகானந்தம்
திரு. K.P. கருணா
திரு. D. வினோத்
நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு 27வது வருட விழாவை கொண்டாட இருக்கிறது இவ்வருடம் அக்டோபர் மாதம் 19ஆம் தேதி நடைபெறுகிறது. விழாவை சிறப்பிக்க இந்தியாவில் இருந்து சிறப்பு வருகை தருகிறார்கள். தவில் வித்வான் கலைமாமணி திருப்புன்கூர் T.G. முத்துகுமாரசுவாமி அவர்களும் நாதஸ்வர வித்வான் அளவையூர் கலாநிதி R. கேதீஸ்வரன் அவர்களும் அத்துடன் Toronto, Montreal ஆலயங்களில் இருக்கும் நாதஸ்வர தவில் வித்வான்களும் மற்றும் Toronto, Montreal நாதஸ்வர தவில் வித்வான்களும் இணைந்து மங்கள இசையை சிறப்பிக்க உள்ளார்கள் அத்துடன் வளர்ந்துவரும் இசைக் கலைஞர்களின் பாட்டு, வயலின், மிருதங்கம், வீணை, பரதநாட்டியம் ஆகிய நிகழ்வுகளும் நடைபெறவுள்ளது. அனைத்து குருமார்கள் நாதஸ்வர தவில் கலைஞர்கள் மற்றும் ரசிக பெருமக்கள் அனைவரையும் வருக வருக என நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு வரவேற்கிறது.
செல்வி N. கீர்த்திகா
செல்வி C. சனாதினி
விபரங்களுக்கு: நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு
DR. ஆ. முருகதாஸ் Tel:416-420-1309 / 289-660-3850
Email: ntm97@yahoo.com web:www.nathaswarathavil.org
ANALAI EXPRESS
Analaiexpress TV
Analaiexpress Facebook
Design and Print By Designs 2 Print @ Majestic City : Prabagar - 647.858.2290 / 416 292 4999 / www.designs2prints.com

# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும்
1116



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## ஸ்ரீ கிருஷ்ணன் கோவில் திருகோணமலை

" பவாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந்துய ரிடும்பையில் பிறந்து
கூடினேன் கூடி இளையவர் தம்மோடு
அவர்தரும் கல்வியே கருதி
ஓடினேன் ஓடி உவப்பதோர் பொருளால்
உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து
நாடினேன் நாடி நான்கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம். "

மனிதநேயத்தையும், சமாதானத்தையும் மறந்து, ஐதீகத்தில் நம்பிக்கைகொண்ட முன்னைநாள் ஜனாதிபதி திருமதி. சந்திரிகா அம்மையார் அவர்கள், தமிழ்நாட்டில் வாழ்ந்த கணபதி ஸ்தபதியிடம், சயனநிலையிலுள்ள அரங்கநாதர் சிலையை உருவாக்கித்தருமாறு கோரியுள்ளார். அத்தோடு ஸ்ரீரங்கம் கோவிலைப்போன்று இலங்கையில் அமைக்க, 25 ஏக்கர் நிலமும் ஒதுக்கப்பட்டது. விபீஷணன் கொண்டுவந்ததாகக் கருதப்படும் அரங்கநாதரைவிட மூன்று அடி அதிக நீளமுள்ள 16 அடிகொண்ட சயனநிலையிலுள்ள அரங்கநாதரை கணபதி ஸ்தபதி அவர்கள் உருவாக்கியுள்ளார்கள். கோவில் அமைப்பதற்குரிய கோபுர சிற்பங்கள், பிரகாரசந்நிதிகள் யாவும் இவரால் பூர்த்தி செய்யப்பட்டவேளையில், இலங்கையில் அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டது. இக்காரணத்தினால் சந்திரிகா அம்மையார் மேற்கொண்ட அரங்கநாதர் கோவில் நிறுவும் முயற்சி தடைப்பட்டது. இலங்கையில் நிறுவப்படவிருந்த மூலவருக்குக் கண்திறக்க முடியாத நிலையில், அரங்கநாதர் இவரிடமே இருந்ததாகவும், அத் திருவுருவத்தை தமிழ்நாட்டிலேயே நிறுவியுள்ளதாகவும் அறியமுடிகின்றது. பிரதிஷ்டை செய்யும்பொழுதே திருவுருவங்களின் கண்திறப்பது மரபு.

இலங்கை தொடர்ந்தும் யுத்தபூமியாகத் திகழ்வதைக் கண்ணுற்ற கணபதி ஸ்தபதி அவர்கள், அரங்கநாதர் ஆலயத்தை இலங்கையில் நிறுவுவதன்மூலம், யுத்தம் மறைந்து சமாதானபூமியாக இலங்கை விளங்கும் என்ற கருத்துடையவராகக் காணப்பட்டார்ர். புத்தன்காட்டிய அன்புவழிகளை மறந்து, அனைத்து சமாதான முயற்சிகளையும் முடக்கியவர்கள் அக்கறைகொண்டால், இலங்கை சமாதானபூமியாக மலரும் என்பதில் ஆன்மீகவாதிகள் தொடர்ந்தும் நம்பிக்கை கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். போர் தர்மத்தை உரைத்த கிருஷ்ணபரமாத்மாவின் ஆலயம் இலங்கையில் அமைந்தால் அட்டூழியங்கள் நிறுத்தப்பட்டு, போர்தர்மமாவது கடைப்பிடிக்கப்படும் என்பதில் பலரும் நம்பிக்கை கொண்டவர்களாக விளங்குவது, எதிர்காலத்தில் அரங்கநாதர் ஆலயம் இலங்கையில் அமைவதற்குரிய நல்ல அறிகுறியாகவே தோன்றுகின்றது. இலங்கையின் முடிவற்ற இனப்பிரச்சினைக்கு இவ்வாறான ஒரு ஆன்மீக வழியிலான தீர்வு கூறப்பட்டிருப்பது, இறைநம்பிக்கை, மற்றும் ஐதீகம் என்ற தளத்தில் மக்கள் கொண்ட நம்பிக்கையே மேற்கூறிய விடயங்களின் வெளிப்பாடாகக் காணப்படுகின்றது.

" *உள்ளம் பெருங்கோவில் ஊனுடம்பாலயம்* "

என்ற ஆழ்ந்த தத்துவத்தை உணர்ந்தால், ஒருவர்க்கொருவர் அன்புசெலுத்தி, வாழமுடியும். இதுவே சமயங்களின் முடிபாகவும் காணப்படுகின்றது.


திருகோணமலையிலே காணப்படுகின்ற ஸ்ரீகிருஷ்ணன் கோவில், வடஇந்திய போர்வீரர்களின் தேவைகருதி அமைக்கப்பட்டது. இக்கோவில் அமைப்பதற்கு திருவிளங்க நகரத்தாரும், ஆரியநாட்டவரும் பெரிதும் துணைபுரிந்துள்ளனர். தமது பணிமுடிந்து வடஇந்தியப்படைவீரர்கள் இந்தியாவிற்கு மீண்டும் செல்லநேரிட்டது. இவ்வேளையில் ஆலயம் அமைக்க உதவிய ஆரியநாட்டவரிடமும், திருவிளங்க நகரத்தாரிடமும் ஆலயப்பொறுப்புக்களை ஒப்படைத்துவிட்டுச் சென்று விட்டனர்.

இதன்பின்னர் இவ்வாலயத்திலே பூசை செய்துகொண்டிருந்த திரு.இரகுநாதஐயர் என்பவருடன் சேர்ந்து திருவிளங்க நகரத்தாரும், ஆரியநாட்டவரும் 1837 ஆம் ஆண்டு, ஒரு ஒப்பந்தம் செய்தனர். இதற்கமைய மேலதிக அதிகாரங்களைப்பெற்ற இரகுநாதையர், பூசைப்பொறுப்பை ஏற்று ஆலயத்தை நடத்தி வந்தார். புராதன தமிழ் மக்கள் தேடிவைத்த ஆத்மீகச் செல்வங்களாக சைவமும், வைணவமும் விளங்குகின்றன. சைவர்கள் சிவத்தையும், வைணவர்கள் விஷ்ணுவையும் வழிபடுவது சமய உலகின் சமரச வழிபாட்டு முறையாகக் காணப்படுகின்றது. சைவமும் தமிழும் தழைத்தோங்கும் திருகோணமலைப்பிரதேசத்தில், சிவாலங்களைப்போன்று ஏனைய ஆலயங்களும் போற்றப்படுகின்றன.

திருவிளங்கநகரத்தார், ஆரியநாட்டவர்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி, திருகோணமலையிலுள்ள ஸ்ரீ கிருஷ்ணன் கோவில் பூசை வழிபாடுகளைப் பொறுப்பேற்று நடத்திவந்த இரகுநாதையருக்குப் பின், ஸ்ரீ முத்துக்குமாரசாமிக்குருக்களும், அவரின்பின் ஸ்ரீ சுப்பையாக்குருக்களும், பூசை செய்து வந்தார்கள். இவர்களின்பின் ஸ்ரீ பஞ்சநதக் குருக்கள் இவ்வாலயத்தில் பூசை செய்யும் பொறுப்பை ஏற்றார். இவர் இரகுநாதஐயருடைய மகள் சர்மசம்வர்தனி அம்மாளைத் திருமணம் செய்து கொண்டவர். திருமணவழியிலுள்ள உரிமையினால் இவர் ஸ்ரீ கிருஷ்ணன் கோவிலில் பூசைசெய்யத் தகுதி பெற்றார்.

ஸ்ரீ பஞ்சநதக்குருக்களின் பின், இவருடைய மகனான யோகீஸ்வரக் குருக்கள் ஆலயப்பொறுப்பையேற்று மிகத் திறம்பட நடத்தியுள்ளார். மிகக் கற்றறிந்தவராக விளங்கிய இவர் காலத்தில் ஆலயம் மிகச் சிறந்த நிலையில் காணப்பட்டுள்ளது. இவரது மறைவிற்குப்பின் இவருடைய மகள், ஆலய நிர்வாகப் பொறுப்பையேற்று நடத்தியுள்ளார். ஆதியில் சிறு கோவிலாக, குறிப்பிட்ட சாரார் வணங்குவதற்காக மட்டுமே அமைக்கப்பட்ட ஆலயத்தின் திருப்பணி வேலைகள், காலத்திற்குக் காலம் நடைபெற்று வந்துள்ளது. ஆரியநாட்டாரும், திருவிளங்க நகரத்தாரும், இவ்வாலயத்திலே பல திருப்பணிகளைச் செய்துள்ளனர். இவர்கள் மகாமண்டபம், ஸ்நபன மண்டபம், ஸ்தம்பமண்டபம், வசந்தமண்டபம், என்பனவற்றைக் கட்டியுள்ளார்கள்.

**வளரும்...**




THE TAMIL MIRROR October 15, 2024
TM தமிழ் மிரர் Tamil Mirror
YOUR BUSINESS FOR GROWTH...
MIRROR THAT REFLECTS THE TAMIL COMMUNITY
You're Welcome
19 வது
ஆண்டு விழா
19th year celebrations
Prof. V. Sangara
Narayanan Chief Guest
முனைவர் வே.
சங்கர நாராயணன்
Awards Gala Night
Tamil Mirror
விருது விழா
Awards
Gala
3 வது
முப்பாட்டன்
முருகன் விழா
3rd Muppattan
Murugan
Vizha
NOVEMBER
2024
03
Sunday
4.30 pm
Chinese Cultural Centre,
5183 Sheppard Ave East. Tel: 416-697-0126

# MORTGAGE FINANCIAL SOLUTIONS

- RESIDENTIAL
- COMMERCIAL
- INDUSTRIAL
- CONSTRUCTION
- VACANT LAND




**RESIDENTIAL- COMMERCIAL**

- **Purchase**
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- **Refinance**
- **Renewal**
- **Equity line of Credit**

Contact Us Today

**NESAN**
*Subramaniam*
**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

Powered By
MORTGAGE ALLIANCE
RightBroker=RightMortgage
Mortgage Agent level 1 Licence # M15001465
Mortgage Alliance, Brokerage #10330

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages




இவ்விடத்தில் விளம்பரம்

செய்ய எங்களுடன்

தொடர்பு கொள்ளவும்.

416 752 1524




26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்

உதயம் 1489 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday October 18, 2024

**Canadian High Commissioner for Sri Lanka meets Representatives of Fishing Communities of Islands in Northern Sri Lanka**

## இலங்கைக்கான கனடிய தூதுவர் வடபகுதி தீவக மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்தார்



இலங்கையின் வட பகுதியில் உள்ள சப்த தீவுகளில் சுமார் 1,500 மீனவர்கள் உள்ளனர் ஆனால் அவர்களுக்காக ஒரு எரிபொருள் நிலையம்கூட இல்லாதமை மீனவர்களின் பெரும் பிரச்சனையாக காணப்படுவதாக இலங்கைக்கான கனேடியத் தூதுவரிடம் சுட்டிக் காட்டப்பட்டது.

இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வால்ஷ் (**Eric Walsh**) அவர்கள் கடந்த 14-10-2024 அன்று யாழ்ப்பாணம் தீவகப் பகுதி கடற்றொழில் அமைப்புக்கள் மற்றும் தீவக பெண்கள் வலையமைபின் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடினார். யாழ். புங்குடுதீவு புனித பிரான்சிஸ் சவேரியார் சனசமுக நிலைய மண்டபத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)



## ‘சங்கு’கள்வர்களும் ‘வீட்டு’ திருடர்களும்

“தமிழர் தேசம், சமஷ்டி, சுயாட்சி, அதிகார பரவலாக்கம், தைப்பொங்கலுக்குள் தீர்வு, தீபாவளிக்குள் தீர்வு,13ஐ அமுல்படுத்தல்,அரசியல் கைதிகள் விடுவிப்பு, காணிகள் விடுவிப்பு ,காணாமல் போனோர் கண்டுபிடிப்பு.போர்க் குற்றவாளிகள் தண்டிப்பு சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கை என தமிழ் மக்களின் நாடி , நரம்புகளில் எல்லாம் உசுப்பேற்றி பிரசாரம் செய்து வாக்குகளைக் கொள்ளையடித்த இந்த ““புலித்தோல் போர்த்திய நரிகள்““ தற்போது ““சங்குக் கள்வர்கள் ““,““வீட்டுத் திருடர்கள்““. ““பார்க்காரர்கள் ““,““மாம்பழத் திருடர்கள்““எனக் கோ‘மிட்டுக் கொண்டு மிகவும் அசிங்கமான ““சேறடிக்கும்““அரசியல் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர்““

--கே.பாலா

(தொடர்ச்சி 17ம் பக்கம்)

## இலங்கையின் தேசியமட்ட பெண்கள் உதைபந்தாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனா 20 வயது, 17 வயது இரு அணிகளும் சாம்பியன்களாயின

இலங்கையின் தேசியமட்ட பாடசாலைகளுக்கிடையிலான பெண்கள் உதைபந்தாட்ட தொடரின் இறுதியாட்டத்தில் மகாஜனக் கல்லூரியின் 17, 20 வயது அணிகள் இரண்டும் சாம்பியன்களாகி கல்லூரிக்கு பெருமைசேர்த்துள்ளன.

செல்வி குயின்சி தலைமையிலான 20 வயது மகாஜனா பெண்கள் அணி இறுதியாட்டத்தில் பொலனறுவை பெண்டிவெல கல்லூரியை எதிர்கொண்டு 4:0 என்ற கோல்கள் கணக்கில் பெரு வெற்றிபெற்றது.

உமாசங்கவி தலைமையிலான 17 வயது மகாஜனா பெண்கள் அணி இறுதியாட்டத்தில் குருநாகல் மலியதேவ மகளிர் கல்லூரியை எதிர்கொண்டு 4:0 என்ற கோல்கள் கணக்கில் பெரு வெற்றிபெற்றது.

தொடர்ச்சி 4ம் பக்கம்



## தனது வெற்றிகரமான 20வது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் "கிழக்கிலங்கை குழந்தைகள் மேம்பாட்டுச் சங்கம்"



கனடாவை தளமாகக் கொண்டு இயங்கும் “கிழக்கிலங்கை குழந்தைகள் மேம்பாட்டுச் சங்கம் – **Children Development Association of Eastern Sri Lanka** (சீடாஸ் - கனடா) எனும் அமைப்பு இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் பரவலாக சுமார் இரண்டு தசாப்தங்களாக சமூகப்பபணிகளை செய்து வருகிறது.

சீடாஸ் அமைப்பின் 19 ஆவது வருட பூர்த்தி நிகழ்வு கடந்த 12.10.2024 அன்று கனடாவில் மிகவும் சிறப்பாக இடம் பெற்றது.

இதன் தலைவரான கல்முனையைச் சேர்ந்த நோ.விஜயரெட்ணம் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில், கலை நிகழ்ச்சிகள், பேச்சுக்கள், போட்டிகள், பரிசளிப்புக்கள், சேவைக்கான கௌரவிப்புக்கள் என மிகவும் நேர்த்தியான திட்டமிடலுடன் இடம் பெற்றது. இவ்வருட நிகழ்வில் தொடர்ச்சியாக சங்கத்திற்கு ஆதரவு வழங்கி வரும் மூன்று அங்கத்தவர்களுக்கு விருதுகள் வழங்கப்பெற்றன

(தொடர்ச்சி 23ம் பக்கம்)

## மட்டக்களப்பில் தேர்தலில் போட்டியிடும் தமிழ் கொடி சமூக அமைப்பினரின் சுயேச்சைக்குழு 11



தமிழ் மக்களுக்கு எந்தவொரு இடையூறுகளும் இன்றி சேவை செய்வதற்கு கட்டாயம் அரசியல் தேவைப்படுகின்றது அதற்காக மட்டக்களப்பில் தமிழ் கொடி சமூக அமைபினர் சுயேச்சை குழு 11 இலக்கத்தில் தேர்தலில் போட்டியிடுகின்றோம் எனவே தேர்தலில் வெற்றி பெற்றாலும் தோல்வியடைந்தாலும் மக்களுக்கான சமூக சேவையை தொடர்ந்து எமது அமைப்பு சேவை செய்துவரும் என சுயேச்சைக்குழு 11 தாயக்கட்டை சின்னத்தில் போட்டியிடும் தலைவர் பொன்னுத்துரை சுதர்சன் தெரிவித்தார். மட்டக்களப்பு வெஸ்ஒப் மீடியாவில் 16-10-2024 அன்று புதன்கிழமை இடம்பெற்ற சுயேச்சைக் குழு 11 வேட்பாளர் அறிமுகமும் ஊடக மாநாடும் இடம்பெற்றது இதன் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

(தொடர்ச்சி 18ம் பக்கம்)